விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 026 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 30 புதன்கிழமை (14.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## புதிய கல்விச் சீர்திருத்தம் திட்டமிட்டபடி தொடரும்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய கல்விச் சீர்திருத்தம் திட்டமிட்டபடி தொடரும் என ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (13) பிற்பகல் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும்

15ஆம் பக்கம் பார்க்க

### அரசாங்க சேவைக்கு

## புதிதாக 26 ஆயிரத்து 95 பேரை இணைத்துக் கொள்ள அனுமதி



(கொழும்பு)

அரசாங்க சேவைக்கு புதிதாக 26 ஆயிரத்து 95 பேரை இணைத்துக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்

15ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதி அநுர நாளை யாழ்.விஜயம்

- வேலணை, மானிப்பாய் மருதடியில் இடம்பெறும் பொங்கல் நிகழ்வுகளிலும் பங்கேற்பு.
- மீசாலையில் இடம்பெறும் தேசிய வீடமைப்பின் ஆரம்ப நிகழ்விலும் பங்கேற்பார்.

(யாழ்ப்பாணம்)

பொங்கல் நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாளை வியாழக் கிழமை யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### அரச வாகனங்களுக்கு

## எரிபொருள் பெற 'டிஜிட்டல் அட்டை'

(கொழும்பு)

அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகத் திற்காக டிஜிட்டல் அட்டை முறையை அறி முகப்படுத்துவதற்கு

15ஆம் பக்கம் பார்க்க

### யாழில் ரூ.10 கோடி பெறுமதியான

## தங்க நகைகளை திருடிய பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் உள்ள பிரபல நகைக்கடை ஒன்றில் 10 கோடி ரூபாய் பெறுமதி மதிக்கத்தக்க 2 கிலோ கிராம் தங்க நகைகளைத் திருடிய

02ஆம் பக்கம் பார்க்க

### பேரிடரைக் காரணம் காட்டி

## அபிவிருத்தி ஒருபோதும் முடக்கப்படாது

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட பேரிட ரைக் காரணம் காட்டி அபி விருத்தித் திட்டங்கள் ஒரு போதும் முடக்கபபடமாட் டாது என ஜன்ாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

நாட்டை மீண்டும் கட்டி யெழுப்பும் வேலைத்திட் டத்தை திறம்பட வழிநடத்து வதற்காகச் செயற்படுத்தப் பட்டு வருகின்ற 'Rebuilding Sri Lanka' தேசிய வேலைத் திட்டத்தின் அங்குரார்ப் பண நிகழ்வு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க

15ஆம் பக்கம் பார்க்க

## கொக்காவிலில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு



16ஆம் பக்கம் பார்க்க

### முடிவுக்கு வந்தது

## விமலின் போராட்டம்

(கொழும்பு)

தரம் 6 மாணவர்களுக் கான புதிய கல்விச் சீர் திருத்தங்களை அடுத்த வருடம் வரை ஒத்திவைப்ப தாக அரசாங்கம் அறிவித்

16ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் மகிந்தவுடன் கலந்துரையாடல்



15ஆம் பக்கம் பார்க்க

## பிரதமர் ஹரிணிக்கு எதிரான அவநம்பிக்கை பிரேரணை

### 22, 23 இல் சபையில் விவாதம்

(கொழும்பு)

கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக எதிர்க்கட்சி உறுப் பினர்களால் கொண்டுவரப் படவுள்ள நம்பிக்கையில் லாப் பிரேரணையை, ஜன வரி 22 மற்றும் 23ஆம் திகதிகளில் பாராளுமன் றத்தில் விவாதத்திற்கு எடுத் துக்கொள்ள அரசாங்கம் தயார் என அமைச்சரவை

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்க...

இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புறநகரில் வசிக்கும் இளம் பெண் ஒருவரே தான் பணியாற்றிய நகைக் கடையில் சிறிது சிறிதாக தங்க நகைகளை திருடியுள்ளார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்ணை நேற்று நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவரை ஜனவரி 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் மாநகர மத்தியில் இயங்கும் பிரபல நகைக் கடைகளில் ஒன்றில் சுமார் ஒன்றரை வருடம் பணியாற்றிய குறித்த பெண் 3 மாதங்களுக்கு முன்னர் தனக்கு ஜனவரி 21ஆம் திகதி திருமணம் என்று கூறி பணியிலிருந்து விலகியுள்ளார்.

இந்த நிலையில் நகைக் கடையில் கணக்கெடுப்பில் சுமார் 2 கிலோ கிராம் தங்க நகைகள் காணாமல்போனமை அறியப்பட்டு ஆராயப்பட்ட போதே விடயம் கண்டறியப்பட்டு யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் நகைக் கடை முகாமைத்துவத்தினால் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் குறித்த இளம் பெண்ணை நேற்று முன்தினம் கைது செய்தனர். அவரிடம் முன்னெடுத்த விசாரணைகளில் திருடப்பட்ட நகைகளை அடகு வைத்தும், விற்பனை செய்தும் நிலத் துக்கு அடியில் புதைத்து வைத்துள்ளதாகவும் வாக்குமூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## ஜனாதிபதி...

வியாழக்கிழமை 2 மணியளவில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் பொங்கல் நிகழ்வில் பங்கேற்பார்.

தொடர்ந்து 4 மணியளவில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறும் பொங்கல் நிகழ்வில் பங்கேற்பார். தொடர்ந்து 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு மீசாலையில் இடம்பெறும் தேசிய வீடமைப்புத் திட்ட ஆரம்ப நிகழ்விலும் பிற்பகல் 2 மணியளவில் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெறும் நிகழ்விலும் பங்கேற்பார். (ம-7)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - அரியாலை ஆனந்தம் வடலி வீதியில் (AV வீதி) 3ஆம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 1½ பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- AV வீதி முகப்புடன்
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4 Km
- ஒரு பரப்பின் விலை 60 இலட்சம்.
- A9 வீதியிலிருந்து 400m தூரம்.

தொடர்பு:- (1934)

**076 860 2770, 076 987 8617**


# மரண அறிவித்தல்

## பாலசுப்பிரமணியம் சின்னக்கிளி



அளவெட்டி மேற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் சின்னக்கிளி அவர்கள் நேற்று (13.01.2026) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் அமரர்களான சின்னட்டி - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் அமரர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிமுத்து, மீனாட்சி, பசுபதி, சின்னம்மா, செல்லையா, சின்னத்துரை, முருகையா, நாகம்மா ஆகியோரின் சகோதரியும் தர்மசீலன் (ஆசிரியர்), பிரமிளா (ஆசிரியை - யா/கொல்லன்கலட்டி சைவத் தமிழ் வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மபாலன், சர்மிலா ஆகியோரின் மாமியாரும் அபிராம், அனுராம், அஜிராம், இலக்கியா, இசைப்பிரியன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2026) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

டச்சு றோட்,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி. (6562)

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 - 02 - 1954



மறைவு 13 - 01 - 2026

## ரோகினீஸ்வரி வேலாயுதம்
### (யா/ மகாஜனக் கல்லூரி பழைய மாணவி)

தெல்லிப்பழை அம்பனையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ரோகினீஸ்வரி வேலாயுதம் அவர்கள் நேற்று 13.01.2026 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை - மாமாங்கம் தம்பதியினரின் அன்பு மகளும் கந்தையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, யோகேஸ்வரி, மகேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருட்செல்வி, மலர்ச்செல்வி, அரவிந்தன்(பிரதேச செயலகம் - கண்டாவளை), வைகுந்தன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நவகுமார்(சிற்றூழியர் - யா/மல்லாகம் தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலாயம்), சத்தியகுகன்(சிங்கப்பூர்), சோபனா(ஆசிரியர் - கிளி/ வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்), துவாரகா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, விஸ்வலிங்கம், சிவபாக்கியம், இரத்தினம், துரைராசா, ஜெயராசா, குணராசா, வியாளம்மா(கிளி), செல்வராசா, சறோசாதேவி(தங்கம்) மற்றும் பொன்னம்பலம், லலிதாம்பிகை(ஆச்சி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் நர்மிதன், நயனிகா, கஜனிகன், சங்கீதன், மகிஷா, ரசிகா, அம்ஷுகி, ஆருத்ரா, ஆதிரை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.01.2026 இன்று புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பத்துப்பனையடி,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

077 896 0992
077 896 1020

(C-4812)

தகவல் :
குடும்பத்தினர்

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 17.12.2025 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் கந்தசாமி ஆனந்தமூர்த்தி (வைகுந்தம்)
### (பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் (16.01.2026) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் காலை 8.30 மணியளவில் இடம்பெற்று தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(C-4813)

நாகர்கோவில் மேற்கு,
நாகர்கோவில்.

இங்ஙனம் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்லுக்கான விலை அதிகரிப்பு



(கொழும்பு)

நெல்லுக்கானவிலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் போகம் முதல் சம்பா மற்றும் கீரி சம்பா நெல் வகைகளின் விலையை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், அரிசி விலையில் அதிகரிப்பு ஏற்பபாது எனவும் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## அடுத்த வாரம் இலங்கை வரும் ஐ.எம்.எப் பிரதிநிதிகள் குழு



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று எதிர்வரும் 22 ஆம் திகதி நாட்டிற்கு வருகை தரவுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஐந்தாவது மீளாய்வினை பற்றி விவாதிப்பதே இந்த விஜயத்தின் நோக்கமாகும் என்று அவர் தெரிவித்தார்.

விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஐந்தாவது மீளாய்வு ஏற்கனவே நிறைவடைந்துள்ளது. மேலும் ஒப்புதல் வழங்குவதற்காக ஐ.எம்.எப் நிர்வாகக் குழு டிசெம்பர் 15 அன்று முதலில் கூட திட்டமிடப்பட்டது. எனினும், விரைவான நிதியுதவிக்கான இலங்கையின் கோரிக்கையைத் தொடர்ந்து கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

மீளாய்வின் முடிவில் நாடு சுமார் 358 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெறும் என்று ஐ.எம்.எப் குறிப்பிட்டுள்ளது. (நி)

## 2 மில்.டொலர் இலங்கைக்கு வழங்கியது அமெரிக்கா

(கொழும்பு)

டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவி செய்வதற்கான மனிதாபிமான உதவியாக இன்னும் 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிவித்தது.

இதன் மூலம் டித்வா சூறாவளி நிவாரணத்திற்காக அமெரிக்கா வழங்கிய மொத்த உதவிகளின் பெறுமதி 4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சூறாவளி கரையைக் கடந்து 72 மணித்தியாலங்களிற்குள் அமெரிக்கா அறிவித்த 2 மில்லியன் அமெரிக்க டொலர்களின் தொடர்ச்சியாக இப்புதிய நிதியுதவி அமைகிறது.

இப்பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு மிகச்சரியான நேரத் தில், செயற்திறனுடைய உதவிகளை வழங்குவதற்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டினை இது அடிக்கோடிட்டுக்காட்டுகிறது. (நி)

## ஒரே நாளில் ஆயிரம் பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 32, 537 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 1018 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும்,15 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 713 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 530 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 502 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 71 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,765 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மகளிர் பிரீமியர் லீக்

# உ.பி.வாரியர்ஸை வீழ்த்தி பெங்களூரு அபார வெற்றி!




**மகளிர் பிரீமியர் லீக் தொடரின் 5 ஆவது லீக் ஆட்டத்தில் உ.பி.வாரியர்ஸ் அணியை 9 விக்கெட்டுக்கள் வித்தியா சத்தில் வீழ்த்தி ரோயல் சேலஞ் சர்ஸ் பெங்களூரு அணி அபார வெற்றி பெற்றுள்ளது**

மகளிர் பிரீமியர் லீக் ரி-20 கிரிக்கெட் போட்டியின் நேற்று முன்தினம் இடம்பெற்ற 5 ஆவது லீக் ஆட்டத்தில் உ.பி. வாரியர்ஸ், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின.

நவி மும்பையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வென்ற பெங்களூரு முதலில் பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய உ.பி. வாரியர்ஸ் அணியின் தொடக்க வீராங்கனைகளாக கப்டன் மேக் லென்னிங், ஹெர்லின் டியோல் களமிறங்கினர்.

லென்னிங் 14 ஓட்டங்களிலும், டியோல் 11 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த லிட்ச்பில்ட் 20 ரன்கள் , கிரன் 5 ஓட்டங்கள் எடுத்தனர்.

பின்னர் களமிறங்கிய டெண்ட்ரா தீப்தி சர்மாவுடன் ஜோடி நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தது.

20 ஓவர்கள் முடிவில் உ.பி. வாரியர்ஸ் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 143 ஓட்டங்கள் எடுத்தது.

144 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் பெங்களூரு அணியின் தொடக்க வீராங்கனைகளாக ஸ்மிருதி மந்தனா மற்றும் கிரேஸ் ஹாரிஸ் களமிறங்கினர்.

கிரேஸ் ஹாரிஸ் 22 பந்துகளில் அரைசதமும் 40 பந்துகளில் 85 ஓட்டங்களும் அடித்து ஷிகா பாண்டேவிடம் பந்தில் ஆட்டமிழந்தார். மந்தனா ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்கள் குவித்தார்.

இறுதியில் 12.1 ஓவர்களில் 9 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை பெங்களூரு அணி வீழ்த்தியது. (3)

# அகில இலங்கை டென்னிஸ் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அபாரம்!




அகில இலங்கை ரீதியில் இம் மாதம் 7, 8, 9, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் கொழும்பு அகில இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தில் நடைபெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான "Cool டென்னிஸ்" போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி சிறப்பான வெற்றிகளை பதிவு செய்துள்ளது.

அந்த வகையில் சிவப்பு நிற பந்து பிரிவில் (Red Ball) சென் பற்றிக்ஸ் கல்லூரியின் தரம் 2 மாணவர்கள் சிறப்பாக விளையாடி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

அத்துடன் செம்மஞ்சள் நிற பந்து பிரிவில் (Orange Ball) தரம் 4 மாணவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்றதோடு தரம் 5 மாணவர்கள் பச்சை நிற பந்துப் பிரிவில் (Green Ball) காலிறுதிச் சுற்றுக்குள் முன்னேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)




# கிரிக்கெட் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஆஸி.மகளிர் அணித்தலைவி!



அவுஸ்திரேலிய மகளிர் அணியின் தலைவரும், எட்டு உலகக் கிண்ணப் பட்டங்களை வென்ற அனைத்து காலத்திலும் மிகவும் வெற்றிகரமான வீராங்கனைகளில் ஒருவராகக் கருதப்படும் அலிசா ஹீலி ஓய்வு குறித்த தீர்மானத்தை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, எதிர்வரும் பெப்ரவரி தொடக்கம் மார்ச் மாதத்தில் இந்தியாவுக்கு எதிரான பல வடிவிலான உள்நாட்டுத் தொடருக்குப் பின்னர் அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அலிசா ஹீலி கூறியுள்ளார்.

2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அவுஸ்திரேலிய மகளிர் அணியின் முழுநேர தலைவராக நியமிக்கப்பட்ட ஹீலி, இந்தியாவுடனான தொடரில் ரி-20 போட்டிகளில் விளையாடமாட்டார்.

ஆனால் மார்ச் 6 தொடக்கம் 9 வரை நடைபெறும் பகல்-இரவு டெஸ்ட் போட்டியில் விளையாடுவார்.

அதேநேரம், தனது தொழில் பயணத்தை முடிப்பதற்கு முன்பு ஒருநாள் போட்டிகளிலும் விளையாடுவார்.

15 வருடகால சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையில் அவர் அனைத்து [illegible] 300 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

7,000 இற்கும் மேற்பட்ட ஓட்டங்களை விளாசியுள்ளார் மற்றும் 275 ஆட்டமிழப்புகளை மேற்கொண்டுள்ளார்.

அவர் தலைமையில் அவுஸ்திரேலியா இரண்டு முறை சர்வதேச ஒருநாள் உலகக் கிண்ணத்தை வென்றுள்ளது.

2022 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் அதிக பட்ச தனிநபர் ஓட்டங்களாக 170 ஓட்டங்களை எடுத்தார்.

மேலும் ஆறு முறை ரி-20 உலகக் கிண்ணத்தையும் வென்றுள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 ஆண்டுகளில் 39.3 பில்லியன் ரூபாய் இழப்பை சந்தித்த மத்தள விமானநிலையம்

(கொழும்பு)

இலங்கையின் மத்தள சர்வதேச விமான நிலையம் கடந்த ஆறு ஆண்டுகளில் சுமார் 39.3 பில்லியன் ரூபாய் நிகர இழப்பைச் சந்தித்துள்ளதாக அண்மைய கணக்காய்வு அறிக்கை ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த நிதி நெருக்கடியைச் சமாளிக்க, விமான நிலையத்தின் நிர்வாகத்தை தனியார் மற்றும் அரச பங்களிப்புடன் முன்னெடுப்பதற்கு அரசாங்கம் புதிய தீர்மானத்தை எடுத்துள்ளது.

"வெள்ளை யானை" என விமர்சிக்கப்படும் மத்தள விமான நிலையம், 2024 ஆம் நிதியாண்டில் மட்டும் 3.36 பில்லியன் ரூபாய் இயக்க இழப்பைப் பதிவு செய்துள்ளது.

இங்கு வருமானத்தை விட செலவு 15 மடங்கு அதிகமாக உள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

2024 இல் விமான நிலையத்தின் வருமானம் வெறும் 242.2 மில்லியன் ரூபாயாகும். ஆனால், அதன் இயக்கச் செலவு 3.6 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

ஆண்டுக்கு 10 இலட்சம் பயணிகளைக் கையாளத் திட்டமிடப்பட்ட போதிலும், கடந்த 6 ஆண்டுகளில் மொத்தம் 3 இலட்சத்து 21 ஆயிரத்து 577 பயணிகள் மட்டுமே இந்த விமான நிலையத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

கட்டுமானத்திற்காகப் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களுக்காக ஆண்டுதோறும் சுமார் 2.05 பில்லியன் ரூபாய் வட்டிச் செலவு கணக்கிடப்பட்டு வருகிறது.

இதற்கு முன்னர் இந்திய - ரஷ்ய கூட்டு நிறுவனம் ஒன்றிடம் விமான நிலையத்தை ஒப்படைக்க எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தைத் தற்போதைய அரசாங்கம் இரத்து செய்துள்ளது. அதற்குப் பதிலாக, புதிய விருப்பக் கோரல் மூலம் தனியார் பங்களிப்புடன் வணிக நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, விமானப் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு போன்ற முக்கிய பிரிவுகள் அரசாங்கத்தின் கீழேயே இருக்கும்.

அதேவேளை, சரக்கு கையாளுதல், விமானப் பராமரிப்பு மற்றும் விருந்தோம்பல் போன்ற துறைகள் தனியார் முதலீடுகளுக்குத் திறந்துவிடப்படவுள்ளன. தற்போதைய 2025/2026 குளிர்கால பருவத்தில் ரஷ்யாவின் ரெட் விங்ஸ், பெலாரஸின் பெலாவியா மற்றும் உக்ரைனின் ஸ்கை அப் போன்ற விமான நிறுவனங்கள் மத்தளத்திற்குச் சேவைகளை ஆரம்பித்துள்ளன. இது விமான நிலையத்திற்குச் சற்று புத்துயிர் அளித்திருந்தாலும், பாரிய கடன் சுமைகளை ஈடுகட்ட இந்த வருமானம் போதுமானதாக இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# நாடு திரும்பும் ஜூலி சங் ஜனாதிபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக தனது இராஜதந்திர சேவையை நிறைவு செய்து, ஜனவரி 16ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்படவுள்ள ஜூலி சங் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்தார்.

ஜூலி சங் தனது பதவிக் காலத்தில் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதற்காக மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகளை ஜனாதிபதி இதன் போது பாராட்டினார்.

அத்துடன், 'டித்வா' சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரிதமாக நிவாரணங்களை வழங்குவதற்காக அமெரிக்காவுடன் இணைந்து அவர் ஆற்றிய பங்களிப்பிற்கு ஜனாதிபதி தனது நன்றியைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளின் போது அவர் வழங்கிய விசேட ஆதரவிற்கும் ஜனாதிபதி இதன்போது பாராட்டுத் தெரிவித்தார். (நி)

### அரசாங்க அதிகாரிகளுக்கான

# பண்டிகைக்கால முற்பணம் 15,000 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க அதிகாரிகளுக்கு வழங்கப்படும் பண்டிகைக் கால முற்பணத் தொகையை 15,000 ரூபாயாக உயர்த்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தாபன விதிக்கோவையின் தொடர்புடைய விதிகளைத் திருத்துவதற்கும், இது தொடர்பாக சுற்றறிக்கை வழிமுறைகளை வெளியிடுவதற்கும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அரசாங்க அதிகாரிகளுக்கு பண்டிகைக் கால முற்பணங்களை செலுத்துவது தொடர்பான தாபன விதிக்கோவையின் விதிகளின்படி, தைப் பொங்கல், ரமழான், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு, வெசாக், தீபாவளி மற்றும் கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகை நிகழ்வுகளுக்கும், புனித யாத்திரைகளுக்கும் தற்போது ஒரு அதிகாரி 10,000 ரூபாய் முன்பணத்தைப் பெற முடியும்.

வட்டி இல்லாமல் 8 மாதாந்திர தவணைகளில் அல்லது தேவைப்பட்டால் முன்னதாகவே மேற்படி முற்பணத் தொகையை வசூலிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் மேற்படி பண்டிகைக் கால முற்பணத் தொகையை 15,000 ரூபாயாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தரம் 6 மாணவர் சேர்க்கை மேன்முறையீடுகள் ஆரம்பம்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில், 2026 ஆம் கல்வி ஆண்டிற்காக தரம் 6 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான முதலாம் சுற்று மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கான காலப் பகுதியைக் கல்வி அமைச்சு அறி வித்துள்ளது.

இதன்படி, 2026 ஜனவரி 12 ஆம் திகதி முதல் ஜனவரி 25 ஆம் திகதி வரை நிகழ்நிலை முறைமையூடாக மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moe.gov.lk இற்குச் சென்று அல்லது http://g6application.moe.gov.lk/#/ எனும் நேரடி இணைப்பினூடாக தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். (நி)

# இராசிபலன்

14.01.2025
மார்கழி 30, புதன்கிழமை
ஏகாதசி முன்னிரவு 7.39மணிவரை
அனுசம் பின்னிரவு 4.43மணிவரை

சுபநேரம் 5.04-6.34 மணிவரை
இராகுகாலம் 12.34-2.04 மணிவரை
ஏகாதசி விரதம், அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்:- பரணி

வளவன்

**மேஷம்** – உற்றார் உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்** – வழிபாட்டுச்சிந்தனை மேலோங்கும் நாள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், போசன சுகமுண்டு, உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** – பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** – நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், உறவினர் வருகையுண்டு.

**ரிஷபம்** – தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொதுவாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** – சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், திடீர் பயணமொன்று ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்** – தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சுறுசுறுப்போடு செயற்படும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கும்பம்** – தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**மிதுனம்** – உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும், உற்சாகமான நாள்.

**கன்னி** – உறவினர் வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** – கடவுளை வழிபட்டுக் காரியம் தொடங்க வேண்டிய நாள், திடீர்ச் செலவுகளை சமாளிக்க வேண்டிய வரலாம், எதையும் சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**மீனம்** – தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

அதிகம் தருவதாகச் சொல்வதைவிட குறைவாகத் தருவது மேல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பா ர த ம்

சர்வதேச அரசியலில் புதிய திருப்பம்

## 10 வருடங்களுக்குப் பிறகு சீனா செல்லவுள்ள ட்ரம்ப்



(வோஷிங்டன்)
வோஷிங்டனுக்கான அவுஸ்திரேலிய தூதர் கெவின் ரூட் தனது பதவியிலிருந்து விலகி சரியாக ஒரு மாதத்திற்குப் பிறகு, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சீனாவுக்குத் தனது முதல் அதிகாரப்பூர்வப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஏறக்குறைய 10 ஆண்டுகளில் சீனாவுக்கு அவர் மேற்கொள்ளும் முதல் பயணம் இது என்பதால், சர்வதேச அளவில் பெரும் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

தற்போதைய ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ், குறிப்பாகச் சமீபத்திய மாதங்களில், சீனா அமெரிக்காவின் நேரடி கவனத்திலிருந்து விலகியிருந்ததாகக் கருதப்படுகிறது.

அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைகளில் சீனாவுடனான மோதல்கள் அல்லது பேச்சுவார்த்தைகள் முன்னுரிமை பெறாத சூழலில், இந்தத் திடீர் பயண அறிவிப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

கெவின் ரூட் போன்ற அனுபவம் வாய்ந்த தூதர்கள் வோஷிங்டனை விட்டு வெளியேறும் வேளையில், இந்த மாற்றம் ஆசிய - பசுபிக் பிராந்திய அரசியலில் புதிய தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த காலங்களில் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் சீனாவுக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டை எடுத்த ட்ரம்ப், தற்போது இந்தப் பயணத்தின் மூலம் எத்தகைய உறவை முன்னெடுக்கப் போகிறார் என்பது உலக நாடுகளின் கேள்வியாக உள்ளது. (3)

## பேச்சுவார்த்தைக்கு அ...
## தாக்குதலுக்கு த...



(வோஷிங்டன்)
ஈரானில் மக்க...
நிலையில், அந்நாட்...
வதற்காக அமெரிக்...
ரிக்க ஜனாதிபதி...

கடந்த டிசம்பர் மாத இறுதியில் தொடங்கிய இந்தப் போராட்டங்களில், பாதுகாப்புப் படைகளால் நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மனித உரிமை அமைப்பான HRANA, இதுவரை சுமார் 500 போராட்டக்காரர்களின் மரணத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக, ஈரானின் தலைநகர் டெஹ்ரானில் உள்ள பிணவறையில் எடுக்கப்பட்ட காட்சிகளை ஆய்வு செய்த பிபிசி, குறைந்தது 180 உடல்கள் வெள்ளைத் துணிகளால் மூடப்பட்டிருப்பதை உறுதிசெய்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப்,

"அவர்கள் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறார்கள். ஆனால், பேச்சுவார்த்தைக்கு முன்னதாகவே நாம் ஏதேனும் ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டியிருக்கும்" என்று குறிப்பிட்டார்.

கடந்த வாரம், ஈரானியப்

## "எங்களுக்கு யாரும் ஆணையிட முடியாது"
## ட்ரம்பிற்கு கியூபா ஜனாதிபதி பதிலடி



(ஹவானா)
"காலம் கடப்பதற்குள் அமெரிக்க அரசுடன் கியூபா ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்" என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் "நாங்கள் என்ன செய்யவேண்டும் என யாரும் எங்களுக்கு ஆணையிட முடியாது" என கியூபா நாட்டு ஜனாதிபதி மிகுவெல் டயாஸ் கெனல் பெர்முடெஸ் தெரிவித்துள்ளார்.

"இனி, வெனிசுலாவில் இருந்து கியூபாவுக்கு எரிபொருள் வர்த்தகம் நடைபெறாது" என்றும் "காலம் கடப்பதற்குள் அமெரிக்காவுடன் கியூபா ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும்" என்றும் ட்ரம்ப் சமூக ஊடகத்தில் பதிவு செய்துள்ளார்.

அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே கியூபா ஜனாதிபதி மேற்கண்டவாறு தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உயிர்கள் உட்பட அனைத்தையும் வியாபாரமாக மாற்றுபவர்களுக்கு கியூபாவை நோக்கி விரல் நீட்ட எந்தத் தார்மீக அதிகாரமும் இல்லை. கியூபாவின் மக்கள் இறையாண்மையுடன் தங்களுக்கான அரசியல் மாதிரியை தேர்வு செய்வதை பொறுக்க முடியாமல் நமது நாட்டின் மீது வெறுப்பை கொட்டுகிறார்கள்.

கியூபாவின் பொருளாதார நெருக்கடிக்கு புரட்சியை குறை கூறுபவர்கள் அடக்கிக் கொள்ளவேண்டும்.

ஏனென்றால், அமெரிக்கா கடந்த 60 ஆண்டுகளாக பயன்படுத்தி வந்த கழுத்தை நெரிக்கும் நடவடிக்கைகளின் பலனை இப்போது அனுபவித்து வருகிறது.


கியூபா ஒரு சுதந்திரமான, இறையாண்மை கொண்ட நாடு.

நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று யாரும் எங்களுக்கு ஆணையிட முடியாது.

கியூபா ஆக்கிரமிப்பு செய்யவில்லை. அது 66 ஆண்டுகளாக அமெரிக்காவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. மேலும், கியூபா யாரையும் அச்சுறுத்துவதில்லை.

கடைசி சொட்டு இரத்தம் உள்ள வரை தாயகத்தைப் பாதுகாக்க கியூபா தயாராக உள்ளது" என்று கூறியுள்ளார். (3)

## ஈரான், சிரியாவில் தொடரும்...
## பாப்பரசர் லியோ...



(டெஹ்ரான்)
ஈரான், சிரியா முதலிய நாடுகளில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து தான் வருந்துவதாக புனித பாப்பரசர் லியோ தெரிவித்துள்ளார்.

வத்திக்கான் நகரில் நடைபெற்ற இறை வணக்க நிகழ்வுக்குப் பின்னர் அங்கு உரையாற்றிய புனித பாப்பரசர் லியோ மேலும் கூறுகையில்,

ஈரான் மற்றும் சிரியா போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் தொடர்ச்சியான வன்முறை மற்றும் பதற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ழைப்பு விடுக்கும் ஈரான்
# ...தயாராகும் அமெரிக்கா!

...கள் போராட்டங்கள் தீவிரமடைந்து வரும் ...ாட்டுத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்து ...க்காவைத் தொடர்பு கொண்டுள்ளதாக அமெ ...தி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

படைகள் போராட்டக்காரர்கள் மீது தாக்குதலைத் தொடர்ந் தால், “நாங்களும் துப்பாக்கிச் சூடு நடத்தத் தொடங்குவோம்” என அவர் கடுமையான எச்சரிக்கை விடுத்திருந்தார்.

போராட்டங்கள் தொடர்பான தகவல்கள் வெளியில் கசிவதைத் தடுக்க, ஈரானிய அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை முதல் நாடு முழுவதும் இணையச் சேவையைத் துண்டித்திருந்தனர்.

இதனால் போராட்டக் களத்தில் நடக்கும் உண்மையான நிலவரங்களைச் சேகரிப்பதிலும், உயிரிழப்புகளை உறுதிப்படுத்துவதிலும் சர்வதேச ஊடகங்களுக்குப் பெரும் சவால் ஏற்பட்டுள்ளது.

தற்போது ஈரானுக்கு எதிராக இராணுவத் தாக்குதல் நடத்துவது அல்லது கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதிப்பது போன்ற கடுமையான முடிவுகள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது ஆலோசகர்களுடன் ஆலோசித்து வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## ஆர்ஜென்டினாவில் காட்டுத்தீ
## தீயில் எரிந்து சாம்பலாகிய 37 ஆயிரம் ஏக்கர் மரங்கள்



(பியூனஸ் அயர்ஸ்)

தென் அமெரிக்க நாடான ஆர்ஜென்டினாவின் படகோனியா மாகாணத்தில் பற்றி எரியும் காட்டுத்தீயால், 37 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான மரங்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன.

அந்நாட்டில் உள்ள படகோனியா உலகின் பழமையான மரங்கள் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் மாகாணமாகும். கடந்த வாரம் சுபுட் மாகாணத்தில் உள்ள எபுயேன் அருகே ஏற்பட்ட காட்டுத் தீ, படகோனியா வரை பரவியுள்ளது.

இதில் 37 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான மரங்கள் எரிந்து சாம்பலாகின. தீயை அணைக்க 500இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள், தன்னார்வலர்கள், 15 விமானங்கள் மற்றும் இராணுவ உதவியுடன் போராடி வருகின்றனர்.

இந்த தீ விபத்தில் 3,000 சுற்றுலாப் பயணிகள் வெளியேற்றப் பட்டுள்ளதுடன் 10 வீடுகளும் தீக்கிரையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## ...ம் வன்முறைகள்
## ...ா கவலை

நிலையால் மக்கள் பலர் உயிரிழந்து வருகின்றனர். எனது சிந்தனையெல்லாம் அங்குள்ள சூழ்நிலையைப் பற்றியதாகவே உள்ளது.

ஒட்டுமொத்த சமூகத்தின் பொது நலனுக்காக பேச்சுவார்த்தை நடைபெறும் என நம்புகிறேன்.

அதற்காக பிரார்த்தனை செய்கிறேன் என்று தெரி வித்துள்ளார்.

அத்துடன் உக்ரைனிலும் அமைதி நிலவ வேண்டும் என்றும் புனித பாப்பரசர் லியோ மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (3)



## இந்தியர்களுக்கு விசா அவசியமில்லை
## ஜேர்மன் அரசு அதிரடி அறிவிப்பு!



(பெர்லின்)

இந்திய கடவுச்சீட்டு உள்ளவர்களுக்கு ஜேர்மனி அரசு விசா இல்லாத போக்குவரத்து வசதியை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, இதன்மூலம் ஜேர்மனி வழியாக ஏனைய நாடுகளுக்கு பயணிக்கும் இந்தியப் பயணிகள் இனி தனியாக ஜேர்மன் விசா எடுக்க வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜேர்மனியில் உள்ள சர்வதேச விமான நிலையங்களின் வழியாக ஏனைய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் போது, இனி விமான நிலைய டிரான்சிட் விசா தேவையில்லை.

விசேடமாக, அமெரிக்கா, கனடா அல்லது பிரித்தானியா போன்ற நாடுகளுக்கு ஜேர்மனி வழியாகச் செல்லும் இந்தியர்களுக்கு இது பெரிதும் உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனிய ஜனாதிபதி பிரட்ரிக் மெர்ஸ் இரு நாள் பயணமாக நேற்றுக் காலை இந்தியா சென்றார்.

இதன்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்ததுடன் இரு நாட்டு பிரதிநிதிகள் மற்றும் மோடி, பிரட்ரிக் பங்கேற்ற உயர்மட்ட குழுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் போதே இந்த உத்தியோக பூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் அறுவடை விழா




(தருமபுரம்)

கிளிநொச்சி மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யூனியன் விழுதுகள் இளைஞர் விவசாயக் கழகத்தின் பங்களிப்புடன் இயந்திர நாற்றுநடுகை மூலம் நடுகை செய்யப்பட்ட நெல் வயல் அறுவடை விழா யூனியன் குளம் பகுதியில் நேற்று நடை பெற்றது.

அக்கராஜன்குளம் விவசாய போதனாசிரியர் கி. சுதர்சினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சண்முகராஜா சிவசிறீ கலந்து கொண்டிருந்தார்.

நிகழ்வில் மாகாண மேலதிக விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.சோதிலட்சுமி, பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர். (8-316)

# டெங்கு பரவும் சூழல் 18000 ரூபா தண்டம்



(நெளுக்குளம்)

ஒட்டுசுட்டான் மற்றும் மாங்குளம் பகுதிகளில் டெங்கு நுளம்பு பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு கள உத்தியோகத்தர்கள் இணைந்து விசேட பரிசோதனை நடவடிக்கைகளை கடந்த7,8 ஆம் திகதிகளில் முன்னெடுத்தனர்.

இதன் போது வீட்டு வளவுகளில் நுளம்பு பெருகும் இடங்கள் சோதனை செய்யப்பட்டதில், நுளம்பு குடம்பிகளுடன் கூடிய நுளம்பு பெருகும் இடங்களை வைத்திருந்த 6 பேர் அடையாளம் காணப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, குறித்த 6 பேருக்கு எதிராக கடந்த திங்கட்கிழமை மாங்குளம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதவான், குற்றவாளிகளை எச்சரித்ததுடன்,ஒருவருக்கு 3000 ரூபா வீதம் மொத்தமாக 18, ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தார். (8-299)

# திருமறைக்கலாமன்றத்தில் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல்விழா இம் முறையும் காலை, மாலை என கலை நிகழ்வுகளுடன் இரு பகுதி களாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாவது பகுதி பொங்கல் தினமாகிய நாளை 15ஆம் திகதி வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு இல.238,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் பணியகத்தில் பொங்கல் வைபவத்துடனும், அதனைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு இல.17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலை ஞானசுரபியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாட்டுடனும் இடம்பெறும். இரண்டாவது பகுதி கலை நிகழ்ச்சிகள் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல.286, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம் பெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஈழத்துத் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் தலைவரும்,யாழ்.போதனா வைத்திய சாலையின் பொது வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி சிவபாலன் சிவன்சுதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.கலை நிகழ்ச்சிகளாக நடனம், கவிதை அளிக்கை, மரபுவழி நாடகப் பாடல்கள்,வேட ஜாலம்- நவீன நாடகம் போன்றவை இடம்பெறும். (8)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கத்தின் பொதுக் கூட்டமும் மத்தியக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு, இலக்கம்:-18, இலந்தைக்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறும்.

சில முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளமையால் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளவும். மேலும், புதிதாக இணைய விரும்பும் ஆசிரியர்களும் அதிபர்களும் இணைந்து கொள்ளலாம் என இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (8)

# சடலத்தைப் பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த 12.11.2025 ஆம் திகதியில் விடுதி 2 இல் அனுமதிக்கப்பட்டு 05.01.2026 ஆம் திகதியில் இறந்து போன விஜயலக்சுமி யோகராசா வயது 48, பன்சல வீதி மட்டக்களப்பு எனும் முகவரியையுடைய ஒருவரது சடலமானது உரிமை கோரப்படாத நிலையில் உள்ளது.

எனவே குறித்த சடலத்தினை அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (8)

# நெடுந்தீவு கடற்பரப்பில் 10 இந்திய மீனவர்கள் கைது!



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் , 10 இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் படகொன்றில் செவ்வாய்க் கிழமை அதிகாலை அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட இந் திய கடற்றொழிலாளர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களையும், அவர்களின் படகினையும் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத் திற்கு கொண்டு வந்துள்ள கடற்படையினர், படகினை அங்கு தடுத்து வைத்துள்ளதுடன் , கைது செய்யப்பட்ட கடற்றொழி லாளர்களை நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-33)

# புதுக்குடியிருப்பு குயின்பூங்காவில் பட்டத்திருவிழாவும் உணவுத்திருவிழாவும்!

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு குயின் பூங்காவில் முதன் முறையாக உண வுத் திருவிழாவும் பட்டத் திருவிழாவும் மிக பிரமாண்டமான முறையில் எதிர் வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இவ் விழாவில் பொது மக்களை மகிழ்விக்கும் வகையில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கலந்து கொள்ளும் வகையில் விஷேடமான பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசுப் பொருட்களும் வழ ங்கி வைக்கப்பட இருக்கின்றன.

நுழைவுக்கட்டணம் இலவசமாக வழங்கப்படும் இந் நிகழ்விற்கு பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (8-299)

# பட்டிப்பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கே.கே. எஸ் வீதியில் அமைந்துள்ள சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் கோமாதா உற்சவம் எதிர் வரும் 16 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கோ பூசை, கோபவனி, பைரவ சுவாமி வீதி உலா, பஞ்சாட்சர திருமுறைப் பஜனை, கோமாதா கீர்த்தனங்கள் என்பன இடம்பெறவுள்ளன.

திருமுறை பாராயணச் செல்வர். ப. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேத நாயகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கோபவனி கே. கே. எஸ் வீதி வைரவர் ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து மின்சார நிலைய வீதி பெரிய கடை யாழ். பேருந்து நிலைய மேற்கு வீதி ஆஸ்பத்திரி வீதியூடாக ஆலயத்தை வந்தடையும். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை


பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 400 | 400 | 500 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 240 | -- | -- |
| பச்சைமிளகாய் | 800 | 900 | 800 | 800 | 700 | 850 |
| தக்காளி | 600 | 600 | 700 | 800 | 600 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 200 | 250 | 150 | 150 | 100 |
| கோவா | 300 | 250 | 300 | 350 | 280 | 230 |
| கரட் | 450 | 450 | 600 | 500 | 450 | 400 |
| பூசணி | 150 | 140 | 150 | 200 | 130 | 130 |
| புடோல் | 300 | 350 | 200 | 400 | 300 | 220 |
| வாழைக்காய் | 150 | 150 | 150 | 200 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 350 | 400 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 200 | 200 | 250 | -- |
| பாகற்காய் | 800 | 800 | 400 | 1000 | 500 | 400 |
| வெண்டக்காய் | 400 | 300 | 250 | 400 | 300 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 250 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 600 | 1000 | 400 | 600 | 600 | 400 |
| லீக்ஸ் | 400 | 450 | 500 | 600 | 420 | 400 |
| பீற்றூட் | 600 | 300 | 1000 | 900 | 750 | 650 |
| கறிமிளகாய் | 800 | 900 | 800 | 800 | 700 | 650 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- | -- | -- |
| போஞ்சி | 600 | 500 | 400 | 500 | 420 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | 400 | 450 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 80-150 | 150 | 140 | -- | 160 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 | 250 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 200 | 150 | 120-180 | -- | 120 |
| இராசவள்ளி | 600 | 900 | 500 | 500 | -- | 475 |
| வெங்காயப்பூ | 800 | 400 | 500 | 800 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 200 | 200 | 250 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 100 | -- | 80 |
| ஈரப்பலா | 150 | 200 | 100 | 200 | -- | 90 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வரூபம் எடுக்கும் இணைய மோசடிகள்

## ஓராண்டில் புகார்கள் இருமடங்காக பதிவு



(கொழும்பு)

இலங்கையில் இணையவழி நிதி மோசடிகள் கடந்த ஒரு வருடத்தில் இருமடங்காக அதிகரித்துள்ளதாக பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக சமூக வலைத் தளங்கள் ஊடாக முன்னெடுக் கப்படும் இவ்வாறான மோசடிக ளைக் கட்டுப்படுத்த பொலிஸார் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தீவிர நடவடிக்கைகளை ஆரம் பித்துள்ளன.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யூ.வூட்லர் வழங்கிய தரவு களின்படி 2024 ஆம் ஆண்டு ஆயிரத்து 528 புகார்கள் பதி வாகின, 442 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். கடந்த ஆண்டு புகார்களின் எண்ணி க்கை 3 ஆயிரத்து 100 ஆக இருமடங்காக அதிகரித்துள் ளது. இதில் 314 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு மாத்திரம் இணைய மோசடிகளுடன் தொட ர்புடைய 146 வெளிநாட்டவர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சீனா, இந்தியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் சுற்றுலா விசாவில் வந்து கொழும்பு, நீர்கொழும்பு, கம் பஹா ஆகிய பகுதிகளில் முகா மிட்டு இவ்வாறான "மோசடி முகாம்களை" நடத்தியது கண் டறியப்பட்டுள்ளது.

இந்த மோசடிகளின் சிக்கல் தன்மை மற்றும் மொழிப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, கடந்த 2024 செப் ரெம்பரில் சீனாவின் சிறப்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவியை இலங்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நாடியுள்ளது.

மோசடிக்காரர்கள் பெரும் பாலும் வங்கிக் கணக்கு விப ரங்கள், கடவுச்சொற்கள், OTP எண்கள் மற்றும் கியூ.ஆர். குறியீடுகளைத் தந்திரமாகப் பெறுதல், ஒன்லைன் வேலை வாய்ப்பு, முதலீட்டுத் திட்டங்கள், இலகு கடன் திட்டங்கள் போன்ற போலி வாக்குறுதி களை வழங்குதல், பிரபலமான வர்களின் பெயரில் போலிச் சமூக வலைதளக் கணக்கு களை உருவாக்குதல், காதல் மற்றும் உறவுமுறை மோசடி கள் என்பவற்றின் மூலம் இடம்பெறுகின்றன.

குற்றப்புலனாய்வுத் திணை க்களத்தின் தலைமையகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள இணையக் குற்றங்கள் தடுப்புப் பிரிவின் மூலம் இவ்வாறான மோசடிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

தெரியாத நபர்களுடன் வங்கி விபரங்களையோ அல் லது தனிப்பட்ட ஆவணங்க ளையோ பகிரவேண்டாம். சந்தேகத்திற்கிடமான லிங்கு களை கிளிக் செய்யவோ, உறுதிப்படுத்தப்படாத செயலி களைத் தரவிறக்கம் செய்யவோ வேண்டாம்.

ஏதேனும் மோசடி நடந்தால் உடனடியாக குற்றப்புலனாய் வுத் திணைக்களத்தின் இணை யக் குற்றப் பிரிவிற்குப் புகாரளி க்குமாறும் அறிவுறுத்தியுள்ள னர்.

இதேவேளை, கடந்த 2025 ஆம் ஆண்டில் மாத்தி ரம் சமூக வலைத்தள தவறான பயன்பாடு மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்பான 12 ஆயி ரத்து 650 புகார்கள் இலங்கை கணனி அவசர தயார்நிலை குழுவிற்குக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

---

## 6 ஆம் வகுப்பிற்கான

# ஆங்கில பாடத்திட்டம் 2027 இற்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

தற்போதைய கல்வி சீர் திருத்த செயல்முறையின் 6 ஆம் வகுப்பு ஆங்கில தொகு தியை மறுபரிசீலனை செய்து 2027 இல் தொடங்க அமை ச்சரவை முடிவு செய்துள் ளது.

எவ்வாறாயினும், 1 ஆம் தரத்திற்கான கல்விச் சீர் திருத் தங்கள் இந்த ஆண்டு எவ்வித மாற்றமுமின்றி நடைமுறைப்ப டுத்தப்படும் என அமைச்சரவை தீர்மான ங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அமைச்சர் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ தெரி வித்தார்.

சர்ச்சைக்குரிய தரம் 6 ஆங்கிலக் கற்றல் தொகுதி தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சு முன்னெடுத்த விசா ரணை அறிக்கைகளின் முடிவு களின் அடிப்படையில், அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய அதி காரிகளுக்கு எதிராக தேசிய கல்வி நிறுவனத்தின் நிருவாக சபை ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ இங்கு குறி ப்பிட்டார்.

அதற்கமைய, மனிதவள மேம்பாடு , உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள், மதிப்பீடு மற்றும் மதிப்பாய்வு நடவடிக் கைகள், பாடத்திட்ட மேம்பாடு, பொதுமக்களுக்கான விழிப்புண ர்வு மற்றும் ஊக்குவிப்பு ஆகிய 5 முக்கிய தூண்களின் அடிப் படையில் குறித்த கல்விச் சீர் திருத்த நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)

---

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3346

### நிதுன்





### ஆத்விக்




### மிதுளன்




### மித்ரா




### தனுஷா




### வனஜன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 954





மதுராந்தகனுடைய அன்னையே அதற்குத் தடையாயிருக்கிறாள். இவ்வளவு தொல்லையான முயற்சியை எதற்காக மேற்கொள்ள வேண்டும்?

ஆதித்த கரிகாலனுக்கு முடிசூட்டுவதென்பது ஏற்கெனவே முடிவான காரியம். அதை நிறைவேற்றுவதில் எவ்வித சிரமும் ஏற்படாது. பழுவேட்டரையர்களின் பிடிவாதந்தான் பெரிய இடையூறாயிருக்கும். அவர்களில் பெரிய கிழவனோ இளைய ராணியின் மோகத்தில் மூழ்கிக்கிடக்கிறான். இன்னும் எத்தனை நாளைக்கு அவன் உயிரோடிருப்பானோ, தெரியாது. இந்தக் கிழவனை நம்பி ஒரு பெரும் அபாயகரமான காரியத்தில் எதற்காகத் தலையிட வேண்டும்? மதுராந்தகன் பக்கம் இருப்பதாகத் தாம் சபதம் செய்து கொடுத்திருப்பது என்னமோ உண்மைதான். அதனால் என்ன? சபதத்துக்குப் பங்கம் செய்யாமலே காரியத்தை முடிக்க வழியில்லாமலா போகிறது? மதுராந்தகன் ஓர் அப்பாவிப் பிள்ளை என் பது தெரிந்த விடயந்தான். அவனைக் கொண்டே "எனக்கு இராஜ்யம் வேண்டாம்" என்று கூடச் சொல்லும்படி செய்து விடலாம். அல்லது அவனு டைய அன்னையின் சம்மதம் வேண்டும் என்று வற்புறுத்தினா லும் போதுமே!"

இவ்வாறெல்லாம் சம்புவரையரின் உள்ளம் சிந்திக்கத் தொடங்கியிருந்தது. ஆகையால் பழுவேட்டரையர் தஞ்சைக்குப் போகும் யோசனையை அவர் உற்சாகமாக ஆதரித்தார். அவர் இல்லாத சமயத்தில் கரிகாலனுடன் அந்தரங்கமாகப் பேசி அவனுடைய உள்ளத்தை நன்கு அறிந்து கொள்ளலாம் என்றும், பிறகு சமயோசிதம் போல் நடந்து கொள்ளலாம் என்றும் எண்ணினார். ஆதலின் பெரிய பழுவேட்டரையரை அவரே துரிதப் படுத்திப் பரிவாரங்களுடன் தஞ்சை அனுப்பி வைத்தார்.

பழுவேட்டரையர் பிரயாணப்பட்டுச் சென்ற பிறகு ஆதித்த கரிகாலனும், அவனுடைய தோழர்களும் வேட்டைக்குப் புறப்பட்டார்கள். அவர்களுடனே மணிமேகலையையும் மற்ற அந்தப்புரப் பெண்களையும் அனுப்பக் கூடச் சம்புவரையர் சித்தமாயிருந்தார். ஆனால் நடப்பதையெல்லாம் வேறு நோக்குடன் கவனித்து வந்த கந்தமாறன் அதை ஆட்சேபித்தான். கரிகாலன் மணிமேகலையிடம் காட்டிய சிரத்தையெல்லாம் நந்தினியை முன்னிட்டுத்தான் என்பதை அவன் உணர்ந்திருந்தான். இதனால் கரிகாலன் பேரில் அவனுடைய வெறுப்பு வளர்ந்திருந்தது. இதை எல்லாம் தந்தையிடம் விளக்கிச் சொல்லவும் முடியவில்லை. ஆகையால், "வேட்டையாடும் இடத்தில் பெண்களைக் கூட்டிக் கொண்டு போய் என்னத்தைச் செய்வது? இவர்கள் பத்திரமாயிருக்கிறார்களா என்று பார்ப்பதற்குத்தான் சரியாயிருக்கும். மேலும் இது ஐப்பசி மாதம், எந்த நிமிடத்திலும் பெரு மழை தொடங்கலாம். ஏரிக்கரைக் காடெல்லாம் வெள்ளமாகிவிடும். பெண்கள் திண்டாடிப் போவார்கள்!" என்று சொன்னான்.

அதன் பேரில் சம்புவரையரும் அந்த யோசனையைக் கைவிட்டு விட்டார். ஆதித்த கரிகாலன் தன் தோழர்களாகிய பார்த்திபேந்திரன், வந்தியத்தேவன், கந்தமாறன் இவர்களையும், மற்ற வேட்டைக்காரர்களையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றான்.

எல்லோரும் சென்ற பிறகு சம்புவரையர் மாளிகை வெறிச் சென்று இருந்தது. நந்தினி, மணிமேகலையைப் பார்த்து "புருஷர்கள் வீட்டில் இருக்கும் போது நமக்குத் தொல்லையாகத் தோன்றுகிறார்கள். ஆனால் அவர்கள் எங்கேயாவது போய்விட்டாலும் நமக்குச் சங்கடமாகத்தான் இருக்கிறது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பிள்ளையும் புதையலும்



ஓர் ஊரில் செண்பகம் என்ற பெண் இருந்தாள். கணவனை இழந்த அவள் தன் ஒரே மகனின் மீது உயிரையே வைத்திருந்தாள். அவள் எவ்வளவு உழைத்தாலும் இருவரும் வயிறார உண்பதற்கு உணவு கிடைப்பது இல்லை. இருவரும் வறுமையில் வாடினார்கள்.

"தன் தாயாரின் துன்பத்தை எப்படியும் துடைக்க வேண்டும். அதற்குப் பணம் வேண்டுமே என்ன செய்வது?" என்று சிந்தித்தான் சிறுவன். அப்பொழுது அவனுக்குக் காட்டிற்குள் சென்றால் துறவிகளைக் காணலாம். அவர்கள் மூலம் புதையல் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டு வரலாம். அது மட்டும் கிடைத்து விட்டால் நம் தாயின் துன்பத்தை நீக்கி விடலாம்" என்ற எண்ணம் தோன்றியது. இதே நினைவில் காட்டிற்குள் வெகுதூரம் சென்றான் அவன். அங்கே மரத்தடியில் துறவி ஒருவர் வீற்றிருந்தார்.

அவரைப் பணிவுடன் வணங்கிய அவன் தன் குடும்ப நிலையைக் கூறி, "எப்படியேனும் எனக்குப் புதையல் இருக்குமிடம் சொல்லுங்கள். அதைக் கொண்டு என் தாயின் துன்பத்தைப் போக்குவேன்" என்று வேண்டினான்.

"மகனே! எழுந்திரு! உன் தாயாரிடம் ஏற்கனவே புதையல் கிடைத்து விட்டது. இனி நீ மகிழ்ச்சியுடன் வீட்டிற்குச் செல்" என்றார் துறவி.

துள்ளிக் குதித்துக் கொண்டே வீடு திரும்பிய சிறுவன் தன் தாயாரைப் பார்த்து, நடந்த எல்லாவற்றையும் கூறினான். "அம்மா! அந்தத் துறவி உமக்குப் புதையல் கிடைத்துவிட்டதாகக் கூறினாரே. எங்கே அந்தப் புதையலைக் காட்டுங்கள் பார்க்கலாம்" என்று கேட்டான்.

உடனே அந்தத் தாய், அவனைக் கட்டித் தழுவிக் கொண்டு, "மகனே! நீதான்டா அந்தத் துறவி சொன்ன புதையல். எந்த மகன் தன் தாயின் துன்பத்தைப் போக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறானோ அவன்தான் அந்தத் தாய்க்குக் கிடைத்த உண்மையான புதையல் ஆவான். இதைத்தான் எனக்குப் புதையல் கிடைத்து விட்டதாக அந்தத் துறவி சொல்லியிருக்கிறார்" என்று விளக்கம் தந்தாள். மகனும் மகிழ்ச்சி அடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வெட்டித்துறையில்

# 'லஞ்சீற்' பாவனைக்குத் தடை மீறினால் கடும் நடவடிக்கை

## நகரசபை அறிவிப்பு

(கரணவாய்) ---------------------

**வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட உணவகங்களில் "லஞ்சீற்" பயன்படுத்த முற்றாக தடைசெய்யப்படுவதாகவும் அதனை மீறி செயற்படும் உணவகங்களின் வியாபார உரிமம் இடை நிறுத்தப்படும் எனவும் வல்வெட்டித்துறை நகரசபை அறிவித்துள்ளது.**

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் வழிகாட்டுதலில் உணவக உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் நகராட்சிமன்றத்தின் பொது மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

உபதவிசாளர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சகல உணவு கையாளும் நிலையங்களிலும், திருமண மண்டபங்களிலும், அன்னதான மடங்களிலும் லஞ்சீற் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் அதனை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வியாபார உரிமம் இடைநிறுத்தப்படும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. குறித்த நடைமுறை எதிர்வரும் 16ஆம் திகதி முதல் முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேலும் 2026ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமங்களை மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (8-60)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 2001- இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்- IT System Analyst (Australia)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16413

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:சதயம்
கி-பா- 6 3/4
உயரம்-5'8"
தகைமை/தொழில்-BSc, Engineer
எதிர்பார்ப்பு: படித்த தகுதியான பெண்
தொ.இ: B/16416

பிறப்பு: 1989-இந்து
நட்சத்திரம்-பூசம்
12இல்செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்-O/L,கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16419

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
கி-பா-19
8இல்செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்-பட்டதாரி, Teacher
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16420

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
12இல்செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BA, London
எதிர்பார்ப்பு: Only UK
தொ.இ: B/16421

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-கார்த்திகை
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc(IT), Software Engineer
எதிர்பார்ப்பு: அரசதொழில்,Business
தொ.இ: G/16408

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்-பூராடம்
7இல்செவ்
கி-பா- 78
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc,MSc, உதவிப் பிரதேச செயலாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16410

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்-உத்தராடம்
உயரம்-5'
தகைமை/தொழில்: B.Pharm, Pharmacist
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/16414

பிறப்பு-1980-இந்து
நட்சத்திரம்:அனுசம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில் - Degree
எதிர்பார்ப்பு: Only Australia, விவாகரத்தானவர்
தொ.இ: G/16415

பிறப்பு-1999 - இந்து
நட்சத்திரம்-விசாகம்
கிபா-36 1/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.Pharm, Demo
எதிர்பார்ப்பு - உயர்பதவி
தொ.இ: G/16417

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 520



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மதிய தூக்கம்!

என்னுடைய நண்பர் ஒருவர் இருக்கிறார். மதியம் சாப்பிட்டு முடிந்ததும் அப்படியே சாய்ந்துவிடுவார்.

கொஞ்ச நேரம் தூங்கிவிட்டு வருவார். அதன்பின் சுறுசுறுப்பாக வேலை செய்வார்.

பொதுவாக எல்லோருக்குமே மத்தியானம் சாப்பிட்டதும் கொஞ்சம் கீழே சாய்ந்தால் தூங்கலாம் போல தோன்றும் இது இயற்கை தான்.

கொஞ்சம் தூங்கி எழுந்திருந்தால் அதன்பின் உடம்பும் கொஞ்சம் கலகலப்பாக இருக்கும்.

அறிவியல் ஆய்வுகள் என்ன சொல்கிறது தெரியுமா? இரவுத் தூக்கத்தின் நடுப்பகுதியிலேயிருந்து 12 மணிநேரம் கழித்து உடம்பு அதிகமாக சோர்வடையும் உறக்கத்தைத் தேடுகிறது அந்த நேரம்.

ஒரு பதினைந்து நிமிடம் தூக்கம் கிடைத்தால் உடம்பு மறுபடியும் லேசாக ஆகிவிடும் கடுமையான உழைப்புக்குத் தன்னை தயார் படுத்திக்கும்.

நீண்ட தூக்கங்களைவிட இதுமாதிரி குட்டித் தூக்கங்களுக்கு மதிப்பு அதிகம் இதை நேப் என்று சொல்வது வழக்கம்.

நெப்போலியன் குதிரை சவாரியிலே இருக்கும் போது தூங்குவது வழக்கம் - இல்லையா? - அதனாலே அந்தப்பெயர் வந்தது என்று சிலபேர் சொல்லுவார்கள்.

ஆனால் உண்மையான காரணம் அது இல்லை Knappian என்பது ஒரு பழைய ஆங்கில வார்த்தை. அதுலேயிருந்து வந்ததுதான் நேப்- என்று விபரம் தெரிந்தவர்கள் சொல்கிறார்கள்.

ரொம்பப் பெரிய பொறுப்பிலே இருந்தவர்கள் எல்லாம் மதியம் தூங்கி எழுந்திருப்பது உண்டாம். வின்ஸ்டன் சர்ச்சில்.

மதியம் மூன்று மணிக்குத் தூங்க ஆரம்பித்தால் ஆறுமணிக்குத்தான் விழிப்பாராம்.

இரண்டாவது உலக யுத்தம் நடந்தது. அப்போது ஜேர்மன்காரர் லண்டனிலே குண்டு போட்டார்கள்.

அப்போது சில சமயம் இவருடைய தூக்கம் கலைந்திருக்கிறது.

உயிரியல் வல்லுநர்கள் மிருகக்காட்சி சாலையிலே உள்ள மனிதக் குரங்குகளை ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறார்கள். அதெல்லாம் மத்தியான நேரத்திலே தூங்குமாம்.

விடியற் காலையிலே புத்துணர்ச்சியோடு இருக்குமாம். பரிணாம கொள்கையின்படி மனிதர்களுக்கும் அது தொடர்ந்து வந்திருக்கிறது இது.

குட்டித் தூக்கத்துக்குப் அப்புறம் சூடான பானங்கள் சாப்பிட்டால் விசாலப் பார்வை கிடைக்குமாம். காபி டீ பழக்கம் இல்லாதவர்கள் எலுமிச்சை சாறு அருந்தலாமாம்.

தூங்கி எழுந்த உடனே இசையைக் கேட்கிறதோ அல்லது புத்தகம் வாசிக்கிறதோ நல்லதில்லையாம்.

அது மேலும் தூக்கத்தைக் கிளறுமாம். சாப்பிட்டவுடனே அப்படியே படுப்பதைவிட மூன்று குவளை தண்ணீர் குடித்துவிட்டுப் படுத்தால் நல்லதாம்.

செரிமானம் சுலபமாக இருக்குமாம்.

சியஸ்டர் - என்று சொல்லப்படுகின்ற இந்த மதிய தூக்கம் இயற்கைக்கு புறம்பானது அல்ல.

இது நல்லதுக்குத்தான் என்று அது சம்பந்தமான நிபுணர்கள் எல்லாம் சொல்கிறார்கள் மதியத் தூக்கம் மாதிரியே பயணத் தூக்கம் என்று ஒன்று!

பிரயாணம் செய்யும்போது தூங்குவது! சிலபேர் பேருந்திலே உட்கார்ந்த உடனே தூங்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஒருவர் டாக்டரைத் தேடி வந்தார். கேட்டார்.

"ஏன் டாக்டர்? பேருந்திலே உட்கார்ந்து போகும் போது தூங்குவது தவறா? என்று கேட்டார்.

"அது ஒன்றும் தவறு இல்லையே!" என்றார் டாக்டர்

"அப்புறம் ஏன் என்னை வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள்?" என்றார் அவர்.

"நீங்கள் என்ன வேலை பார்க்கிறீர்கள்?" என்றார் டாக்டர்.

"பேருந்திலே சாரதி உத்தியோகம் பார்க்கிறேன்!" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண அபிவிருத்தியில் துல்லியமான தரவுகளின் அவசியம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


**வாருங்கள் எம்மினிய உறவுகளே**

இவ்வருடத்தில் வடமாகாண அபிவிருத்தியின் உந்துதலுக்கு துல்லியமான தரவுகளின் (precised data) அவசியம் பற்றி பலரும் முணுமுணுக்கத் தொடங்கியிருக்கின்றனர். எந்தவொரு திட்டமிடலுக்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் அவற்றின் முன்னேற்றத்தினை கண்காணிப்பதற்கும் துல்லியமான தரவுகளின் தேவை அவசியமாகின்றது. இது அனைத்துத் துறைகளிலும் அவற்றின் செயற்பாட்டை, வினைத் திறனை இன்னும் நடைமுறைப்படுத்தப்பட்டதனை அறிவதற்கு அவசியமானதொன்றாக கருதப்படுகின்றது. எமது பிரதேசத்தின் வளர்ச்சியை உற்று நோக்கினால் நாம் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் வடமாகாணத்து அந்நிய செலாவணி ஏறக்குறைய 4.6 என்ற அளவுகோலிலேயே இடர்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் ஆகக்குறைந்த அளவாக கருதப்படுகின்றது. வட மாகாணத்தின் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தாமை, இங்குள்ள ஆளணியை புத்தாக்கத்திற்குள் உள்வாங்கி எமது பிரதேசத்தின் தரமான உற்பத்திகளை உலக சந்தைக்கு கொண்டு செல்லாமை, இளைஞர் யுவதிகளை எமது சுதேச பொருட்களின் உற்பத்திக்குள் முழுமையாக உள்வாங்காமை, எமக்கான தொழிற் சந்தைகள் எதிர்பார்த்தளவு இல்லாமை, மாணவர்கள் கற்பதற்கும் தொழில் வாய்ப்புக்கும் மேலும் உற்பத்திக்குமான அதிகரித்த இடைவெளி, பெருகிவரும் விஞ்ஞான தொழில் நுட்ப அறிவை, அதன் பிரயோகத்தை பயன்படுத்தும் திறனை அதிகரிக்காமை, அதற்காக எப்போதும் தொழில் வல்லுநர்களை நம்பியிருக்கின்ற நிலைமை என்பன இவற்றினுள் சிலவாகும்.

விவசாயத்தில் உற்பத்தியினளவு, உற்பத்தி செய்யும் பிரதேசம், காலத் தேவைகளுக்கான உற்பத்தியின் விஸ்தீரணம், தேவையான விதை அல்லது நடுகைப்பொருட்கள் உள்ளடங்கிய உள்ளீடுகள், உற்பத்திக்கான மேலதிக ஊட்டச்சத்து உள்ளீடுகள், பயிர்ச்செய்கையில் சேதம் அல்லது பயிரழிவு, உற்பத்தியை தரமானதாக உலகத் தரம் வாய்ந்ததாக உருவாக்குவதற்கு தேவையான தொழில் நுட்பம், மதிப்பேற்றஞ் செய்வதற்கான தொழில் நுட்ப வசதி, இப்படி பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். எதுவென்றாலும் அவற்றை நாம் முழுமையாக பெறும் வழிவகைகளை கண்டறிந்தாலேயொழிய இந்த சரிவிலிருந்து உற்பத்தியை உயர்த்த முடியாது. வட மாகாணத்தின் வளர்ச்சிக்கு துல்லியமான தரவுகள் அனைத்து துறைசார்ந்தும் தேவைப்படுகின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட முழுமைத் தரவுகள் (Big Data) மாகாணத்தின் வளர்ச்சியில் அத்திபாரமாக கருதப்படுகின்றன. இந்த தரவுகளை டிஜிற்றல் தர்வுகளாக மாற்றியமைத்து அவற்றினை அனைவரும் பயன்படுத்தும் வகையில் பதிவேற்ற வேண்டும். இதனை மையமாகக் கொண்டு இற்றைக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய வங்கியின் வடமாகாண கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்ட தொழில் வல்லுநர்கள் மாநாட்டில் வடமாகாணத்திற்கான முழுமைத் தரவுகளை டிஜிற்றல் வகையில் சேகரித்து பேணுவதற்கும் அவற்றை தொழில் முனைவோர், தொழில்வல்லுநர்கள் மற்றும் மாணவர்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக பயன்படுத்துவதற்கும் பரிந்துரைக்கப்பட்டது. எமது மாகாணத்தில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் கல்வி கற்று பலம்திறமையுடைய இளையவர்களை ஒன்றிணைத்து இத்தரவுத் தகவல் வங்கி (Data information Bank) உருவாக்கப்பட வேண்டும் என்னும் நிலைப்பாடும் எடுக்கப்பட்டது. வழக்கமான கருத்தரங்குகள் போல இந்த முடிவுகளும் அப்படியே நடைமுறைப் படுத்தப்படாமல் அறிக்கையிடலோடு நின்றுவிட்டது. எம்மிடம் இருக்கின்ற மனித வளங்களை முறையாக நாம் பயன்படுத்தினால் அவர்களுக்கான வேலைவாய்ப்பும் அதிகரிப்பதோடு துல்லியமான தரவுகள் காலத்துக்குக்

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு..



காலம் டிஜிற்றல் மூலமாக பெறப்பட்டு அவை பகுத்தாயப்பட்டு பெறப்பட்ட தரவுகளின் மூலமான அன்றைய நிலவரத்தை அறிய முடிவதோடு தொழிற்றுறையின் வளர்ச்சி அதில் ஏற்படும் இடர்ப்பாடு அவற்றை சீர்ப்படுத்தலின் மூலம் வளர்ச்சியை மேன்மைப்படுத்துவதற்கான வாய்ப்பு என்பனவற்றையும் இலகுவாக கண்டறிய முடியும்.

இந்த வசதியை ஏற்படுத்தினாலன்றி வடமாகாணத்தின் வளர்ச்சியையும் அதன் அபிவிருத்தியையும் அளவிட முடியாது. இதனை கருத்தில் கொண்டு எமக்கு தேவையான முழுமைத்தரவுகளை அனைத்து துறைசார்ந்தும் துல்லியமாக பெறுவதற்கான வசதிவாய்ப்புக்களை ஆளுநர் செயலகத்தின் முனைப்புடன் ஒரு பொறிமுறையாக உருவாக்க வேண்டும் என்னும் கோரிக்கையை அண்மையில் விவசாய பீடத்தில் நடைபெற்ற பல்திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் ஆளுநர் அவர்களும் சுட்டிக் காட்டினார். இதற்கான வேலைத்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்தி "தரவு தகவல் வங்கியினை" முன்னேற்பாடாக உருவாக்குவது பற்றியும் அதன் பொறிமுறை பற்றியும் அவசியம் கலந்துரை யாடப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இதில் தேவைப்படும் தகவல்களை பொது மக்களுக்கு தெரியப் படுத்தவும் வேண்டும் என்னும் பரிந் துரையும் முன்வைக்கப்பட்டுள்ளது. எமது மாகாணத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் பரீட்சயமுள்ள இளைஞர்களை இணைத்து இவ் வங்கியினை விரைந்து உருவாக்கினால் அது எந்த தொழிற்றுறையினதும் வளர்ச்சிக்கும் அவற்றின் வினைத்திறனான செயற்பாட்டிற்கும் உறுதுணையாக விளங்கும்.

வடமாகாணத்தில் தற்போதுள்ள வளங்கள், நடைமுறையிலுள்ள தொழிற்றுறைகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆளணி, உற்பத்தி மையங்கள், விவசாய உற்பத்தி மற்றும் அவற்றின் மதிப்பேற்றஞ் செய்த பொருட்கள், தரநிர்ணயஞ் செய்யும் வழிமுறைகள், அதற்கான பரீட்சிக்கும் நிலையங்கள், பயிருற்பத்தி பற்றிய விளக்கங்கள், பயிர்த்தெரிவு பயிர்ச் செய்கை தொழில்நுட்பங்கள் அவற்றின் பெறுபேறுகள் என அனைத்தையும் பதிவு செய்வதற்கான வழிமுறைகள், புதிய உற்பத்திகள், தொழிற்றுறை விருத்தி கண்டுபிடிப்புக்கள் என்பன ஊக்குவிக்கப்படல் வேண்டும். தொழிற் றுறைவிருத்திக்கான ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு சார்ந்த புலமையாளர்களின் ஒழுங்கமைப்பு இவற்றுடன் பல்துறை விற்பன்னர்களை கொண்ட ஆலோசனை கருத்தரங்குகள் என்பன உருவாக்கம் பெறல் அவசியமானதாகும்.

செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு முழுமையாக நுகரப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. வட மாகாணத்தின் ஒவ்வொரு திணைக்களத்திலும் இவ்வாறு தரவு தகவல் வங்கிக்கான மையங்கள் உருவாக்கப்பட்டு தரவுகள் அவ்வப்போது மேன்மைப் படுத்தப்பட்டு அனைத்து திணைக்களங்களதும் ஒன்றிணைக்கப்பட்ட வலையமைப்புக்குள் தரவுகளை இலகுவாக சுயமாக பரிமாறுவதற்கான மாகாண தரவு தகவல் மையம் உருவாக்கப்படல் அவசியமானதாகும். இந்த பொறிமுறையின் சிறப்பான செயற்பாட்டுக்கு பல்கலைக் கழக மாணவர்களையும் உள்வாங்கி பல்துறைசார் தரவுச் செயலணி இயங்கும் நிலையை அடைதல் வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல்துறைசார் ஆளணியையும் மாணவர்களையும் இணைத்த பொறிமுறையை உருவாக்குவது இவ்வாறான செயற்பாட்டிற்கு புத்துயிரளிக்கும். மாணவர்களை எமது பிராந்திய அபிவிருத்தி பற்றி சிந்திக்கவும் ஆய்வுகளை செய்யவும் எமது வளங்களை முழுமையாக இனங்கண்டு அவை பற்றிய தரவு தகவல்கள் துல்லியமாக பேணப்படுவதற்கும் உள்வாங்கலாம். தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை, எமக்கான அபிவிருத்தியை நோக்கி நகர்த்துவதற்கான சாத்தியமான கட்டமைப்பின் மூலம் உருவாக்கினால் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் ஒன்றிணைவை இதில் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் காலநிலை மாற்றம் (Climate change) பற்றிய கணிப்பீடுகள், மாற்றங்கள், அவை பற்றிய முன்னறிவிப்புகளுக்கான மையம் டிஜிற்றல் வழி பொறி முறையூடாக வடமாகாணத்தில் உருவாக்கப்படல் அவசியமாகின்றது. எமது மாகாணத்தின் வளர்ச்சியில் காலநிலை பற்றிய தகவல்கள் விவசாய செய்கையிலும் கால்நடை அபிவிருத்தியிலும் தொழிற்றுறை விருத்திக்கும் அவசியம் தேவையானதொன்றாக கருதப்படும் நிலையில் இவையனைத்தையும் ஒன்றிணைத்த பொறிமுறையை உள்ளடக்கிய மையத்தின் உருவாக்கத்தை அனைவரும் ஒன்றிணைந்து உருவாக்குவதும் அதன் மூலம் விவசாய பெருமக்களுக்கும் தொழிற்றுறைக்கும் உற்பத்தியாளர்களுக்கும் தேவையான அனைத்து காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை சீற்றத்தை துல்லியமாக கணிக்கும் பொறிமுறைக்கு புலம்பெயர்ந்த துறை சார் வல்லுநர்களையும் இணைத்து அதனை செயற்படுத்த ஆவன செய்தல் அவசியமானதாகும். செல்பேசி தொழில் நுட்பத்தின் (Mobile technology) அதிகரித்த பயன்பாடு கொவிட் 19இன் போது உணரப்பட்ட நிலையில் அதனை சிறந்த ஊடகமாக பயன்படுத்தி தகவல்களை பெறுவதற்கும் அனைவரையும் இணைக்கும் பொறிமுறையாகவும் பயன்படுத்த முடியும்.

வடமாகாண அபிவிருத்தி செயலணியின் இவ்வருட முதன்மை நோக்காக தரவுத் தகவல் வங்கியின் தேவை உணரப்பட்டுள்ள நிலையில் இதற்கான கலந்துரையாடல்களை மேலும் விரிவுபடுத்தி இந்த விடயத்தில் நாம் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும் பட்சத்தில் எமது மாகாணத்தின் அபிவிருத்தியை பல்துறைசார்ந்து பல கோணங்களில் விரிவுபடுத்தி இங்குள்ள மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யவும் தனிமனித குடும்ப வருமானத்தை உறுதி செய்யவும் பல்துறை தொழிற்றுறைகள் விருத்தியடையவும் புதிய தொழிற்றுறைகள் உருவாகவும் எமது இளையவர்களுக்கான சிறப்பாக பணிபுரியும் களமாக அவை இருக்க வேண்டும் என்னும் நிலைமையும் எமது மாகாணத்து தரமான உற்பத்திகள் உலகசந்தையில் வலம்வருவதையும் அனைவரும் எதிர்பார்த்திருக்கின்றனர். சுற்றுலாத்துறையின் விருத்தி அனைத்து துறைசார் தொழிற்றுறைக்கும் பாரிய ஊக்கசக்தியாக இருக்கும். இவையனைத்திற்கும் இவ்வருடத்தில் பெரியதொரு மாற்றத்தின் மூலமாக நல்ல செய்தி கிடைக்கும் என அனைவரும் எதிர்பார்த்திருக்கின்றனர். ஆக்கபூர்வ மான நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெறுவதனால் அனைத்தும் சுமுகமாக வெற்றியிலக்கை நோக்கி நடைபயிலும் என நம்பலாம். வாருங்கள் அனைவரும் இதில் இணைந்து எமது மாகா ணத்தின் வளர்ச்சியை முன்னிறுத்து வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான எண்ணங்களால் உங்களைச் சுற்றி அரண் அமைத்துக் கொள்ளுங்கள்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முருகன் சூரனை ஆட்கொண்டான் கண்ணன் கௌரவரை அழித்தான்

முருகன் தமிழ்க் கடவுள் என்று கூறுவதற்குக் காரணம் அவன் வைதாரையும் வாழ வைப்பவன்.

சூரனை வதம் செய்வது முருகனின் கடமையாகிறது. ஆம், சூரன் போர் ஆரம்பித்துவிட்டது. முருகப் பெருமான் சூரபன்மனுக்குத் தனது திருப்பெருவடிவத்தைக் காண்பிக்கின்றார்.

முருகனின் திருப்பெருவடிவம் கண்ட மாத்திரத்தில் சூரன், முருகனைச் சேவிக்கின்றான். இருந்தும் ஆணவம் அவனை விடுவதாக இல்லை.

ஈற்றில் சூரனை முருகன் வதம் செய்யாமல், அவனை சேவலாகவும் மயிலாகவும் ஆட்கொள்கின்றான்.

இங்குதான் சூரன், வதம் செய்யப்படாதது ஏன்? என்ற வினா எழுகிறது.

ஆம், சூரனிடம் குடியிருந்த செருக்கு தன்னிலைப்பட்டது. அது மற்றவர்களால் ஏற்படுத்தப்பட்டதன்று.

இங்குதான் திருப்பெருவடிவத்தைக் கண்ட மாத்திரத்தில் அவன் கைகூப்பி தன் அறியாமையை நினைந்து கொள்கின்றான். அறியாமை எனும் இருளை அறிந்தவனை ஆட்கொள்வதே முறைமை என்பதால், சூரபன்மனை வதம் செய்யாது அவனை முருகன் ஆட்கொண்டான்.

அதேநேரம் பாரதப் போரில் கௌரவர்களை மன்னித்து ஏற்க கண்ணன் மறுத்துவிடுகிறான்.

ஆம், பாரதப் போரில் வெற்றி பெற்றது பாண்டவர்களாயினும், போரை நடத்தியது பார்த்தசாரதியாகிய கண்ணபரமாத்மா என்பதே உண்மை.

ஆம், இங்குதான் கௌரவர்களை ஆட்கொள்ளாமல், அவர்களை. வதம் செய்து அழிக்க வேண்டும் என கண்ணபரமாத்மா தீர்மானிக்கின்றார். இதற்குக் காரணம் உண்டு.

ஆணவம் என்பதும் தீய குணம் என்பதும் ஒன்றன்று. அகந்தை அகலக்கூடியது. கெட்ட குணம் அழிக்கப்பட வேண்டியது.

தவிர, கௌரவர் தலைவனாகிய துரியோதனனுக்கு சகுனியே ஆலோசகன். ஒரு தீயவனுக்கு கெட்டவன் ஆலோசகனாக இருந்தால், அங்கு திருத்துதல் என்பதற்கு இடமேயில்லை.

ஆகையால்தான் துரியோதனனை வீமன் வதம் செய்வதற்கு கண்ணன் உறுதுணை புரிகிறான்.

ஆம், துரியோதனனுடன் போர் புரிகின்ற வீமனுக்கு துரியோதனனின் உயிர்நிலை அவனது தொடையில் உள்ளதென்பதை கண்ணன் குறிப்பால் உணர்த்த, வீமனின் கதாயுதம் துரியோதனனின் உயிர்நிலையைப் பிளக்கிறது.

இங்கு சூரனை ஆட்கொண்ட முருகனையும் துரியோதனனை வதம் செய்த கண்ணனையும் ஒப்புமை செய்வதற்குக் காரணம் என்ன? என்று நீங்கள் கேட்கலாம்.

இங்குதான் இந்த நாட்டின் எதிர்க்கட்சிகளாக இருக்கின்ற முன்னாள் ஆட்சியாளர்கள், அவர்களுடன் சேர்ந்து அமைச்சர்களாக இருந்தவர்கள்; துரியோதனன், சகுனி, துச்சாதனன் ஆகியோருக்கு ஒப்பானவர்கள்.

எனவே இவர்கள் இந்த நாட்டை உருப்பட ஒருபோதும் விடமாட்டார்கள் என்பதால், அரகல என்ற அவதாரத்தின் மீள் எழுச்சி இப்போது இந்த நாட்டில் தேவையாக இருக்கிறது.

அந்தத் தேவை முருகன் – சூரன் ஆட்கொளல் போன்றதல்ல என்பதை சிங்கள மக்கள் உணர்தல் வேண்டும்.

# கல்விச் சீர்திருத்தத்தை அரசியல் மயமாக்காதீர்

## கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

கல்விச் சீர்திருத்தத்தை அரசியல் பிரச்சினையாக மாற்றாதீர்கள் என இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அந்தச் சங்கம், ஆக்கபூர்வமான விமர்சனங்கள், யோசனைகள் மற்றும் தொழில்சார் பங்களிப்பு மூலம் இந்தச் சீர்திருத்தச் செயல்முறையை வலுப்படுத்தத் தமது சங்கம் தயாராக உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், புதிய கல்விச் சீர்திருத்தங்கள் குறித்துப் பல்வேறு தவறான கருத்துக்கள் பரப்பப்படும் பின்னணியில், இது குறித்து மக்கள் தேவையற்ற அச்சத்தையோ அல்லது சந்தேகத்தையோ கொள்ளத் தேவையில்லை என்றும் கல்விச் சீர்திருத்தச் செயல்முறைக்கு எதிராக எழுந்துள்ள எதிர்ப்புகளைப் பகுப்பாய்வு செய்யும் போது, அவற்றில் கணிசமானவை தொழில்சார் அல்லது விஞ்ஞான ரீதியான காரணங்களின் அடிப்படையில் அல்லாமல், வெறும் அரசியல் நோக்கங்கள் மற்றும் குறுகிய காலப் பிரபலத்தை இலக்காகக் கொண்ட அணுகுமுறைகளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளமை புலப்படுவதாகவும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதற்கமைய, இவ்வாறானதொரு போக்கு கல்விக்கு மட்டுமல்லாது, ஒட்டுமொத்த தேசத்தின் எதிர்காலத்திற்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கல்விச் சீர்திருத்தங்களை அரசியல் போர்க்களமாக மாற்றுவதன் மூலம் அநீதி இழைக்கப்படுவது கட்சிகளுக்கு அல்ல, மாறாக நாட்டின் பிள்ளைகளுக்கும் எதிர்கால சந்ததியினருக்குமே என்பதை அனைத்துத் தரப்பினரும் பொறுப்புடன் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் முழுமையாகப் பிள்ளைகளின் எதிர்காலம் மற்றும் நாட்டின் நீண்டகால அபிவிருத்தியை இலக்காகக் கொண்டதாக அமைய வேண்டும் என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வி முறைமைகளுக்கு அமைய, கலைத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறைகளை எட்டு வருடங்களுக்கு ஒருமுறையேனும் புதுப்பிப்பது அத்தியாவசியமான பணியாகக் கருதப்படுவதாகவும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

விஞ்ஞான முன்னேற்றம், தொழில்நுட்ப மாற்றங்கள், தொழில் சந்தையின் தேவைகள் மற்றும் சமூக சவால்கள் மிக வேகமாக மாறிவரும் ஒரு யுகத்தில், பல தசாப்தங்களாகப் பழைய கலைத்திட்டங்களைப் பேணுவது, பிள்ளைகளுக்கு எதிர்காலத்திற்குப் பொருத்தமான அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களை வழங்குவதில் பாரிய தடையாகி உள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் நான்கு மாடி நவீன மருத்துவ விடுதி

## அமைச்சரவை அனுமதி

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் சுகாதாரத் தேவைகளை மேம்படுத்தும் நோக்கில், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் புதிய நான்கு மாடி மருத்துவ விடுதி தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் 600 மில்லியன் ரூபாய் நிதியுதவியுடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பொதுமக்களுக்குக் குறைந்த செலவில் உயர்தரமான மற்றும் தொடர்ச்சியான மூன்றாம் நிலை மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக இந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் நான்கு மாடிகளைக் கொண்ட புதிய விடுதித் தொகுதி ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட இந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை தனது பூரண அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

இதற்கமைய, இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இந்த நிர்மாணப் பணிகளைத் துரிதமாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பொங்கலை முன்னிட்டு

# ஆடியபாதம் வீதியில் கனரக வாகனங்கள்

## உள்நுழையத் தடை

தைப்பொங்கல் தினத்தினை முன்னிட்டு திருநெல்வேலி சந்தியை அண்மித்த பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் நோக்குடன் ஆடியபாதம் வீதியில் இராமசாமிப் பரியாரியார் சந்தியில் இருந்து திருநெல்வேலிச் சந்தி நோக்கி கனரக வாகனங்கள் மட்டும் உள்நுழைவதற்கு தடை செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொங்கல் தினத்தினை முன்னிட்டு, பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு திருநெல்வேலி சந்தி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ள கடைகளில் பெருமளவான மக்கள் கூடுவதனால், வாகன நெரிசல்கள் ஏற்பட்டுள்ளன.

இந் நிலையில் வாகன நெரிசலை தவிர்க்கும் நோக்குடன், இன்று புதன்கிழமை ஆடியபாதம் வீதியில் இராமசாமிப் பரியாரியார் சந்தியில் இருந்து திருநெல்வேலிச் சந்தி நோக்கி கனரக வாகனங்கள் மட்டும் உள்நுழைவதற்கு தடைசெய்து குறித்த வீதியினை ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை இன்று புதன்கிழமை மாத்திரமே நடைமுறை [illegible] என தெரிவித்துள்ளார். (ம-7,33)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு பதிலான மாற்றுச் சட்டம் தொடர்பில் யாழில் கலந்துரையாடல்

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்தில் (PSTA) உள்ள ஆபத்துக்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை, யாழ். பொது நூலக மண்டபத்தில் வடக்கு கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்தச் சட்டம் நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது. ஆனால் பரந்த வரையறைகள் மற்றும் கடுமையான பிரிவுகள் காரணமாக, இது பொதுமக்களின் போராட்டங்கள், சிவில் சமூக செயற்பாடுகள் மற்றும் புலம்பெயர் சமூகத்தினரை குறிவைக்கக்கூடும் என கலந்துரையாடலில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.


இலங்கைக் குடிமக்கள் வெளிநாடுகளில் இருந்தாலும் இந்தச் சட்டத்தின் கீழ் வருவார்கள், சமூக ஊடகங்களில் கருத்து தெரிவிப்பவர்களும் பாதிக்கப்படலாம் என விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில், வளவாளராக சட்டத்தரணி ஐங்கரன் கலந்து கொண்டதுடன் பங்குபற்றாளர்களாக பிரதேச சபைகளின் தவிசாளர்கள், சபை உறுப்பினர்கள், மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள் பல்கலைக்கழக மாணவர்கள், கடற் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழப்பநிலையில் மாகாண சபைத் தேர்தல்கள் ஒரு பார்வை

02



கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

ஆனால், ஏற்கனவே ஏழு வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றம் நிராகரித்த எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கையை தற்போதைய பிரதமரின் தலைமையில் குழுவொன்றை அமைத்து மீள்பரிசீலனை செய்யும் உத்தேசம் அரசாங்கத்துக்கு இருக்கிறது என்று சில அரசியல் வட்டாரங்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

### எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கைக்கு நடந்தது என்ன?

விருப்பு வாக்கு முறைமையை இல்லாதொழிப்பதற்காக கலப்பு தேர்தல்கள் முறை உருவாக்கப்பட்டது. அதன் பிரகாரம் மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் பாராளு மன்றத்திற்கு கொண்டுவரப் பட்டு நிறைவேற்றப்பட்டது. அதன் பின் மாகாண சபைக்கான தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு அறிக்கை (2018இல்) பாராளு மன் றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது. மாகாண சபை திருத்தச் சட்டத்திற்கு கையுயர்த்தி வாக்களித்தவர்களே (புதிய தேர்தல் முறையை ஆதரித்தவர்களே) பாராளுமன்றத்தில் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கையை எதிர்த்து வாக்களித்து பாராளுமன்றத்தில் தோற்கடிக்கச் செய்தனர். ஆரம்பத்தில் எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை (2018) மீது குற்றம் சாட்டியோர் பின்னர் புதிய தேர்தல் முறை மீது குற்றம் சாட்டினர். தற்போது இன்னொரு குழுவினர் மாகாணசபை தேவையற்றது என்றும் கூறுகின்றனர். எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை (2018) மீது குற்றம் சாட்டியோர் அதில் உள்ள குறைகள் என்ன என்ற சரியான பதிலை இற்றைவரை கூறவுமில்லை அது எவ்வாறு திருத்தப்பட வேண்டும் என்று ஆராயவுமில்லை. இவ்வாறே மாகாண சபைத் தேர்தல் இழுத்தடிக்கப்படுகின்றது.

### பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்ட எல்லை நிர்ணயக்குழு அறிக்கை

பாராளுமன்றம் மாகாண எல்லை நிர்ணயக்குழு அறிக்கையை நிராகரித்ததுடன், வாக்களித்த நேரத்தில் அறிக்கையை ஆதரித்து பேசிய ஜேவிபியின் உறுப்பினர்கள் உட்பட 86 எம்.பி.க்கள் எதிராக வாக்களித்தனர். எந்தவொருவரும் ஆதரவாக வாக்களிக்கவில்லை. அப்போதைய உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா அறிக்கையை சபையில் சமர்ப்பித்தவர் மற்றும் காலையில் விவாதத்திற்கான பிரேரணையை முன்வைத்தவர் அவர் கூட மாலையில் எதிராக வாக்களித்தார். கடுமையான வாதங்களுக்கு மத்தியில் அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அறிக்கையை அங்கீகரித்திருந்தால் அடுத்த நாள் மாகாண சபைத் தேர்தலுக்கு தேர்தல் ஆணையம் அழைப்பு விடுத்திருக்கலாம் என்று கூறி அதை எதிர்க்கும் முக்கியத்துவத்தை எதிர்க்கட்சி உறுப்பினர் (தற்போதைய ஜனாதிபதி) அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

எல்லை நிர்ணயக்குழு அறிக்கை சபையால் நிராகரிக்கப்பட்டால், மாகாண சபைத் தேர்தலை பழைய விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடத்த முடியும் என்று கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற குழு தலைவர் தினேஸ் குணவர்தன கூறினார். "மாகாண சபைத் தேர்தல் 2019ம் ஆண்டு ஜனவரியில் நடைபெறும் என்று அரசாங்கம் எங்களுக்கு உறுதியளித்துள்ளது, அவ்வாறு செய்ய நாங்கள் வலியுறுத்துகிறோம்," என்றும் அவர் கூறினார். ஆனால் தினேஸ் குணவர்தன அவர்கள் தலைமையிலேயே புதிய தேர்தல் முறை உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர்கள் மனோ கணேசன் மற்றும் ரவுப் ஹக்கீம் உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சியினர் சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளை மீறுவதால் இந்த அறிக்கையை எதிர்ப்பதாகக் கூறினார்கள். அறிக்கை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்ட பின் சபாநாயகரால் நியமிக்கப்பட்ட பிரதமர் தலைமையிலான குழு இரண்டு மாதங்களுக்குள் எல்லை நிர்ணய ஆணைய அறிக்கை குறித்து பரிந்துரைகளை அளிக்கலாம், இதனால் ஜனாதிபதி அதை வர்த்தமானி செய்ய முடியும் என்று அமைச்சர் பைசர் முஸ்தபா கூறினார். இரண்டு மாதங்களில் புதிய கலப்பு முறையின் கீழ் தேர்தலை நடத்த முடியும். நாம் ஒரு முற்போக்கான அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டுமானால் விகிதாசார முறைமையை ஒழிக்க வேண்டும் என்று கூறிய அமைச்சர் மேலும் கூறுகையில் எல்லை நிர்ணய அறிக்கை ஒரு சுயாதீனக் குழுவால் தயாரிக்கப்பட்டது. அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட ஒன்று அல்ல என்றார்.

இவ் விவாதத்தின் போது தமிழ், முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லை நிர்ணக்குழு மீது வைத்த குற்றச்சாட்டுகளுக்கு எல்லை நிர்ணக்குழு பத்திரிகைகள் மூலம் பதில் அளித்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக சிவில் சமூகங்கள் இவ் அறிக்கையில் சிறுசிறு குறைபாடுகளைக் கண்டபோதும் மிகவும் சிறந்த அறிக்கை என்று பல சந்தர்ப்பங்களில் கூறியிருந்ததையும் குறிப்பிடலாம்.

எல்லை நிர்ணக்குழு மீது குற்றம் சாட்டுவதற்கு முன் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன. அவை பற்றி கீழே தரப்படுகின்றது.

### தொகுதிகள் எவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படுகின்றன?

தொகுதிகள் எல்லை நிர்ணயம் இரு படிகளில் செய்யப்படுகின்றன. எந்தவொரு தேர்தலுக்குமான தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் இரு படிகளில் செய்யப்படுகின்றன. முதலாவது படி எல்லை நிர்ணயம் எவ்வாறு செய்யப்படவேண்டும் என்பதாகும். இதில் நியமிக்கப்படும் குழுவுக்குரிய அதிகாரம், ஆசனங்களின் எண்ணிக்கை, எல்லை வரம்புகள், பொறிமுறைகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இச் செயல்முறைக்கான அடிப்படை அளவு கோலானது அரசியலமைப்பினால் அல்லது சட்டங்களினால் கொடுக்கப்படுகின்றன. மாகாண சபைத் தேர்தலுக்கான கலப்பு முறைச் சட்டம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

இரண்டாவது படியில் முதலாவது படியில் கூறப்பட்ட எல்லை வரம்புகளுக்கு அமைய எல்லை நிர்ணயம் செய்வதாகும். இதில் இரண்டாவது படியே நியமிக்கப்படும் எல்லை நிர்ணயக் குழுவினால் செய்யப்படுகின்றது. நியமிக்கப்படும் குழு சுயாதீனமாக இயங்கினாலும் சட்டத்தின் மூலம் அவர்களின் செயற்பாட்டிற்கு பல அளவுகோல்கள் இருக்கும். இதை வேறு விதமாக கூறுவதானால் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கும். அவைபற்றி பார்ப்போம்

### மாகாண சபையின் கலப்பு தேர்தல் முறையில் விதிக்கப்பட்டிருந்த அளவுகோல்கள் என்ன?

1. மாகாண சபைக்கு அதன் அதிகார எல்லைகளுக்குள் அமையப் பெற்றுள்ள நிருவாக மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் அதாவது 50% விகிதாசாரமுறையிலும், ஏனைய உறுப்பினர்களில் மாவட்டங்களை வேறு பிரித்துக்காட்டுகின்ற தேர்தல் தொகுதிகளின் கீழ் எளிய பெரும்பான்மை முறையிலான தேர்தலின் அடிப்படையிலும் தேர்ந்தெடுப்பதற்கு இடமளிக்கின்ற கலப்புத் தேர்தல் முறை.

2. ஒரு நிருவாக மாவட்டத்தின் ஏதேனும் பிரதேசத்தில், இன, மத அல்லது வேறுவகையான அக்கறைப் பிணைப்பினால் ஒன்று சேர்க்கப்பட்ட, ஆனால் அப் பிரதேசத்திலுள்ள பெரும்பான்மையினரான வாசிகளிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இந்த அம்சங்களில் வேறுபடுகின்ற கணிசமான அளவினரான ஆட்கள் உள்ளனரெனக் குழுவுக்குத் தோன்றுமிடத்து, குழுவானது, அத்தகைய நிருவாக மாவட்டங்களைத் தேர்தற்றொகுதிகளாகப் பிரிவிடலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர்...

பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கல்விச் சீர்திருத்தங்கள் தொடர் பில் இதுவரை இடம்பெற்றுள்ள விட யங்கள் மற்றும் எதிர்காலத்தில் இடம் பெறவுள்ள விடயங்கள் குறித்து பெரு மளவான தகவல்களைத் தெளிவு படுத்திக்கொள்ள, இந்த நம்பிக்கை யில்லாப் பிரேரணை மீதான விவாதம் ஒரு சந்தர்ப்பமாக அமையும் என்றும் எதிர்க்கட்சியினர் விரைவில் நம்பிக் கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவார்கள் எனத் தான் எதிர்பார்ப்ப தாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய ஜனவரி 22 மற்றும் 23 ஆகிய இரு தினங்கள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவா தத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தேவைப்படின் மேலும் நாட்களை வழங்குவதற்கும் அரசாங்கம் தயாராக உள்ளதென அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

## எரிபொருள்...

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

இதன்மூலம் எரிபொருள் தேவைக் கேற்ப இணையவழி வங்கி முறைமை ஊடாக அதற்கான பணத்தை ஈடு செய்வதற்கும் தனிநபர் தலையீடு களைக் குறைப்பதன் மூலம் உயர் வெளிப்படைத்தன்மையுடனும் வினைத் திறனுடனும் எரிபொருள் விநி யோகத்தை மேற்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

தற்போது இலங்கை வங்கியும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாப னமும் இணைந்து வாகனங்களுக் கான டிஜிட்டல் அட்டை மூலம் எரி பொருள் விநியோகம் செய்யும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. (ம-7)

## புதிதாக...

கும் வாராந்த சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கமைய 23,344 ஆசிரியர்கள் உட்பட 26 ஆயிரத்து 95 பேர் இந்த ஆட் சேர்ப்பு நடவடிக்கையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு செயல்முறையை மறுஆய்வு செய் வதற்கும் தேவைகள், முன்னுரிமை கள் மற்றும் வெற்றிடத்தை அடை யாளம் காண்பதற்கும் செய்யப்பட வேண்டிய ஆட்சேர்ப்புகளின் எண் ணிக்கை குறித்து தேவையான நட வடிக்கைகளை எடுக்க பிரதமரின் செயலாளர் தலைமையில் அதிகாரி கள் குழுவை நியமிக்க 30.12.2024 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட் டது.

இதற்கமைய, அந்தந்த அமைச் சகங்களின் கீழ் உள்ள துறைகள் மற்றும் பிற நிறுவனங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அந் தந்த அமைச்சகங்களால் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. (ம-7)

## பேரிடரைக்...

தலைமையில் நேற்று கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வ தேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றும்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 'டித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தத்தை காரணம் காட்டி அர சாங்கத்தின் வேலைத்திட்டங்களைப் பின்னோக்கித் தள்ளவோ அல்லது முடக்கவோ ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் பணிகள் வினைத்திறனுடன் முன் னெடுக்கப்படும்.

பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருந்த நாடு, படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டு வரும் வேளை யில் இந்தச் சூறாவளியை எதிர் கொள்ள நேரிட்டது. இருப்பினும்

இதன்மூலம் அரசாங்கம் எவ்விதத் திலும் தனது பொறுப்புகளில் இருந்து நழுவிக் கொள்ளப் போவதில்லை. நாங்கள் தயாரித்துள்ள நிகழ்ச்சி நிரலைக் கைவிடாமல், இந்த அனர்த் தத்தை எவ்வாறு எதிர்கொள்வது என் பது தொடர்பாகத்தான் நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

தேவை ஏற்பட்டால் இந்த அனர்த் தத்தின் மீது பல பழிகளைப் போட்டுத் தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு எமக்கு இருந்தது. வரலாற்றில் நாங்கள் அவ் வாறுதான் பயணித்தோம்.

கடந்த 30 ஆண்டுகளாக அனைத்து அழிவுகளுக்கும் யுத்தத்தையே காரணமாகக் காட்டினார்கள்.

அவ்வாறான ஒரு நிலையே எமக்கு இருந்தது. சில தொற்றுநோய் நிலைமைகளை இந்த அழிவுகளுக் கான போர்வையாக மாற்றிக் கொண் டார்கள்.

எமது வேலைத்திட்டத்தைப் பின் னோக்கித் தள்ளவோ அல்லது செய லிழக்கச் செய்யவோ இந்த பேரிடரை அர சாங்கம் ஒரு போதும் பயன் படுத்தாது என் றார். (ம-7)

## அமெ...

இலங்கைக் கான அமெரிக் கத் தூதுவர் ஜூலி சங் நேற்று முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந் துரையாடினார்.

இந்தச் சந்திப்பு மகிந்த ராஜபக்ஷ வின் இல்லத் தில் நேற்று செவ் வாய்க்கிழமை (07) இடம்பெற் றுள்ளது.

இந்தச் சந்திப் பின்போது ஜூலி சங்கின் சிறப் பான பணிக ளுக்கு நன்றி தெரிவித்த மகிந்த ராஜ பக்ஷ, அவரது எதிர்காலப் பணி களுக்காக வாழ்த் துக்களையும் தெரி வித்துள்ளார்.

ஜூலி சங் நாளை மறு தினம் 16 ஆம் திகதி நாட்டி லிருந்து புறப்பட வுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ம-7)

## புதிய...

ஆசிரியர் தொழிற் சங்கப் பிரதிநிதி களுடன் நடை பெற்ற கலந் துரையாடலின் போதே ஜனாதி பதி இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய கல்வி மறுசீரமைப்புச் செயல் முறை குறித்து இங்கு ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, முத லாம் தரத்திற்கான மறுசீரமைப்புப் பணிகள் திட்டமிட்டபடி முன்னெடுக் கப்படும் எனக் குறிப்பிட்டார்.

அதேவேளை கற்றல் தொகுதி களைத் தயாரிப்பதில் நிலவும் பிரச்சி னைகள், ஆசிரியர் பயிற்சிகளில் ஏற்படும் தாமதம் மற்றும் தொழில்நுட் பச் சிக்கல்களைத் தவிர்த்துக் கொண்டு ஆறாம் தரத்திற்கான கல்வி மறு சீரமைப்புகளை 2027 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-7)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



**மஹஜன சம்பத**
திகதி 2026.01.13
சீட்டிழுப்பு இலக்கம் 6073
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 0 1 8 9 7 4

**அத சம்பத**
D 8 9 7 4
சீட்டிழுப்பு இலக்கம் 0648
National Lotteries Board

**சுப தவசக்**
திகதி 2026.01.13
சீட்டிழுப்பு இலக்கம் 189
கன்னி 10 24 26
0533

**தன நிதானய**
திகதி - 2026.01.13
சீட்டிழுப்பு இலக்கம் - 2103
Z 19 45 46 78 Z
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
Double Chance

**மெகா பவர்**
திகதி 13/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2421
R 26 11 15 21 73

**ஜய**
திகதி 2026.01.13
சீட்டிழுப்பு இலக்கம் 0341
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
Y 4 2 2 7

**கோவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 4315
சீட்டிழுப்பு திகதி 13.01.2026
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 32 40 41 49
W

**HANDAHANA**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.13
சீட்டிழுப்பு இலக்கம் 1382
வெற்றி இலக்கங்கள்
கன்னி 10 49 55 60 கன்னி

உத்தியோகபூர்வ முடிவுகள்
**சுப்பர் தன சம்பத**
13.01.2026
வெற்றி வாரம் 0781
ஆங்கில எழுத்து W
9 5 9 5 7 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,776,723.60
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 3047
சீட்டிழுப்பு திகதி 2026.01.13
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 26 28 66 67
ஆங்கில எழுத்து O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,305,287.20
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

**சனிதா**
திகதி 13.01.2026
வெற்றி வாரம் 5208
வெற்றி இலக்கங்கள் 11 13 20 24
O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,464,279.60
செகண்ட் சான்ஸ்
ரூ. 50,000/- பணப்பரிசு
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

**சசிரி**
வெற்றி வாரம் 877
சீட்டிழுப்பு திகதி 13.01.2026
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 26 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,757,960.00

**ராசி**
சீட்டிழுப்பு வாரம் 4759
சீட்டிழுப்பு திகதி 13.01.2026
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 06 18 30
துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,697,375.20

**லக்பதி** (ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்)
A 29 52 53 55 62
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 2223
13.01.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.620,242,322.40
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

**அத கோடிபதி** ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 2873
சீட்டிழுப்பு திகதி 2026.01.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,702,368.00
வெற்றி இலக்கங்கள் 13 25 37 66
O
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள
Village hotel & Indian Restaurant
இற்கு சமையல் அனுபவம் உள்ள
ஆண்/ பெண் தேவை.

தொடர்புகளுக்கு :
**076 830 3931**
(C-4811)

## சேல்ஸ்மன் தேவை

எமது பிடைவை நிறுவனத்துக்கு
O/L படித்த பிடைவை தொழில் பழக
ஆர்வம் உள்ளவர்களும் தொழில்
அனுபவம் உள்ளவர்களும் தேவை.

**சிவகணேசன் றெக்ஸ்**
**41, பெரியகடை வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(6561)

## கொக்காவிலில்...

A9 வீதி கொக்காவில் பகுதியில் நேற்று (13) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கோர விபத்தில், குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் வவுனியா, குருமன்காடு பிள்ளையார் கோவில் முன் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை பரமேஸ்வரன் (வயது 62) என்பவரே உயிரிழந்தவராவார்.

A9 வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த நபரும் இராணுவத்திற்குச் சொந்தமான பட்டா ரக வாகனமும் விபத்துள்ளானதில் படுகாயமடைந்த பிரஸ்தாப நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மணப்பெண் தேவை

01.பளை, இந்து, 1988, அனுசம், Inventory officer, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30529)
02.கோண்டாவில் - மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
03.அல்வாய், இந்து, 1990, ரோகிணி, Charted accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (42381)
04.நயினாதீவு, இந்து, 1991, சதயம், Bachelor, Newzealand citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(28920)
05.நீர்வேலி, இந்து, 1992, அவிட்டம், Bachelor, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
06.கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07.கரவெட்டி, இந்து, 1993, பூரட்டாதி, Civil Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
08.திருநெல்வேலி, இந்து, 1994, ஆயிலியம், Bsc in computer science, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34159)
09.கொக்குவில், இந்து, 1992, அனுசம், Aca[UK], BBA[Australia], Bsc LLM[UK], UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34763)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website
இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.
எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.
(6551)

**S.Sharma J.P** | 077 539 3728
www.thaalee.com | 076 528 4510

## Happy Supermarket - உரும்பிராய்



| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3 Kg |
| 1Kg கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 270/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 229/= | |
| 1Kg சர்க்கரை | - 235/= | |
| 01 டசின் தீப்பெட்டி | - 155/= | ~~240/=~~ |
| 01 பெட்டி கற்பூரம் | - 290/= | ~~390/=~~ |
| 01 மங்களம் ஊதுபத்தி | -135/= | ~~150/=~~ |

உங்கள்
Happy Supermarket
உரும்பிராயில்
பொங்கல் பொதி
ஒன்றை கொள்வனவு செய்து
Happy go green bag ஒன்றினை
இலவசமாக பெற்றிடுங்கள்.



| SIZE | PRICE |
|---|---|
| 10 | - 590/= |
| 12 | - 770/= |
| 14 | - 890/= |
| 16 | - 990/= |

(1936)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

## விமலின்...

தனது சத்தியாகிரகப் போராட்டத்தை நேற்று முடித்துக் கொண்டுள்ளார்.

புதிய கல்விச் சீர்திருத்தங்களை அவசரமாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கல்வி அமைச்சுக்கு முன்பாக அவர் இந்த சத்தியாகிரகத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்திருந்தார்.

இந்நிலையில், குறித்த சீர்திருத்தங்களை ஒத்திவைக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்தையடுத்து, தனது போராட்டத்தைக் கைவிடுவதாக அவர் அறிவித்துள்ளார்.(ம-7)

## பணிப்பெண் தேவை

யாழ். நல்லூரில் உள்ள
வீட்டிற்கு வீட்டு வேலை மற்றும்
குழந்தை பராமரிப்பு செய்யக்
கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு :
**077 9866 032**
(6559)

## பணியாளர் தேவை

உற்பத்தி தொழிற்சாலைக்கு
வேலை செய்யக் கூடிய ஆண்,
பெண் இருபாலாரும் தேவை.
வயதெல்லை : 20 - 40

தொடர்புகளுக்கு :
**077 634 2478**
(1937)

## மணல் விற்பனை/ பொமிட் போட்டுத் தரப்படும்

**கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு.**
**யாழ். மாவட்டத்திற்கு 65,000 இருந்து..**
**மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டுத் தரப்படும்.**

தொடர்புகளுக்கு :
(1933)
**076 324 9977**

## Schengen Visa


போலிகள் மூலம் உங்கள் பொன்னான காலம்
மற்றும் பணத்தினை விரயமாக்காதீர்கள்

**Visit Visa**

- 99% கடந்த கால Success Rate
- 100 % Money Back gurantee
- நேர்மையான முறையில் சட்டத்தரணி மூலம் ஒப்பந்தம்

**Schengen Visa** என்பது 29 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய
**Schengen** பகுதிக்குச் செல்ல அனுமதிக்கும் அனுமதி

| | |
|---|---|
| Austria | France |
| Belgium | Germany |
| Czech Rupublic | Greece |
| Denmark | Hungary |
| Estonia | Iceland |
| Finland | Italy |
| Sweden | Switzerland |
| Latvia | Norway |
| Lithuania | Poland |
| Liechtenstein | Portugal |
| Luxembourg | Slovakia |
| Malta | Slovenia |
| Netherlands | Spain |



- ☑ 3 மாத காலத்திற்குள் செல்ல முடியும்.
- ☑ விரும்புவோர் முன்பதிவு செய்து நேரில் வரவும்.
- ☑ 13 வருட காலமாக தமிழ் மக்களின் நம்பிக்கை பெற்ற ஒரே ஒரு நிறுவனம்.

**Winstar Consultants (Pvt) Ltd**
45, Vembadi Street, Jaffna.
T.P : 071 071 6979
(1935)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org